**அரசு ஊழியர்**

அக்டோபர் 2017

மலர் : 38 இதழ் : 10

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல், மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம், எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*

# புதிய ஓய்வூதியத் திட்டத்தை ஒழிக்கும் வரை போராட்டம் தொடரும்...

ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் இணைந்த ஜாக்டோ-ஜியோ போராட்டம் 1988, 2003-ல் நடைபெற்ற வீரம் செறிந்த போராட்டங்களின் மற்றுமொரு வரலாற்று பதிவாகும். ஆம்... ஒரு புதிய அத்தியாசத்தை படைத்திருக்கிறது.

பகுத்தறிவுத் தந்தை பெரியார் பிறந்த ஈரோட்டு மண்ணில் போராடுபவர்கள் ஒன்றிணைந்து எடுத்த முடிவின்படி செப்டம்பர் 7ஆம் தேதி எழுச்சிக் கனலாய் தொடங்கியது வேலை நிறுத்தம். முதன்முறையாக வட்ட அளவில் மறியலோடு வேலை நிறுத்தம் துவங்கியது. ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் கோபாவேசத்துடன் ஒருமித்த குரலோடு பங்கேற்றனர்.

போராட்டம் துவங்கிய நாளன்று நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது. அன்று நீதிமன்றம் நமது வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு தடை விதித்தது. தடையை பொருட்படுத்தாது 8ஆம் தேதி மாவட்ட அளவில் பல்லாயிரக்கணக்கில் ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் எந்தவிதமான அச்சமின்றி திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆசிரியர்கள், அரசு ஊழியர்களின் எழுச்சியை உணர்ந்த ஜாக்டோ-ஜியோ உயர் மட்டக் குழு செப்டம்பர் 9ஆம் தேதி கூடி வேலை நிறுத்தத்தை தொடர்வது என முடிவெடுத்தது. முடிவினை எதிர்பார்த்த ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் மகிழ்ச்சியடைந்தனர்.

திட்டமிட்டபடி செப்டம்பர் 11ஆம் தேதி மீண்டும் வட்ட அளவில் ஆர்ப்பாட்டம் எழுச்சியோடு நடை பெற்றது. நாளுக்கு நாள் போராட்டத்தில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. நீதிமன்ற தடையை பொருட்படுத்தாது நடைபெற்ற வேளையில் செப்டம்பர் 11ஆம் தேதி நீதிமன்ற அவமதிப்பு என நீதிமன்றம் உத்தரவிட்டு செப்டம்பர் 15ஆம் தேதி போராட்டத் தலைவர்களில் சிலரை நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிட்டது.

ஆயினும், போராட்டக் கனல் அணையவில்லை. லட்சக்கணக்கில் ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் சிறை சென்றனர். காவல் துறையில் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. ஜாக்டோ-ஜியோ வேலை

**சூடா ஒரு கோப்பை சூப்**

## காப்பாற்றத் தகுந்தது!

கடலில் அடித்துச் செல்லப்பட்ட ஒரு இளைஞன் அலைகளிலிருந்து மீண்டுவர போராடிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்த ஒரு மனிதர் ஆக்ரோஷ அலைகளுக்கு இடையே தன் உயிரை பணயம் வைத்து நீந்திச் சென்று அந்த இளைஞனைக் கரைக்கு இழுத்து வந்தார்.

கரை சேர்ந்த இளைஞன் அவரிடம் கேட்டான். ''ஏன் என்னைக் காப்பாற்றினீர்கள்? நானே போராடி நீந்தி கரை வந்திருப்பேன்.''

அதற்கு அந்த மனிதர் சொன்னார், ''நான் உன்னைக் காப்பாற்றவில்லை, உன்னுடைய போராட்டம் காப்பாற்றத் தகுந்தது என்பதை உறுதி படுத்தினேன் அவ்வளவுதான்'' என்றவர் தொடர்ந்தார்,

''தம்பி, நீ போராட வேண்டிய இடம் கடல் அல்ல. அதோ பார்'' என்று உடம்பைத் திருப்பி கையை நீட்டிக் காட்டினார்.

அங்கே ..... அரண்மனை தெரிந்தது!

நிறுத்தத்தை நடத்திக் கொண்டே நீதிமன்ற அவமதிப்பு வழக்கை சந்திப்பது என முடிவெடுத்தது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் நடைபெற்ற காத்திருப்புப் போராட்டம் காவல் துறையின் அடக்குமுறையை மீறி மிக சக்தியாக நடைபெற்றது. ஆனாலும், போராட்டத் 'தீ' வளர்ந்து கொண்டேயிருந்தது. ஒட்டுமொத்தமாக அரசு நிர்வாகம் முடங்கியது.

போராட்டம் நடைபெற்ற செப்டம்பர் 15ஆம் தேதி தடையை மீறி போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்த தலைமைச் செயலக ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றதோடு, தலைமைச் செயலகத்திலேயே காத்திருப்புப் போராட்டத்தை நடத்தியது ஒட்டுமொத்த போராட்டத்திற்கு மேலும் வலு சேர்த்தது.

போராட்ட களத்திலேயே செப்டம்பர் 15ஆம் தேதி நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தலைவர்கள் சந்தித்தனர். கம்பீரமாக நீதிமன்றத்தில் நின்ற நமது தலைவர்கள் நமது போராட்டத்தின் நியாயத்தையும், கோரிக்கைகளையும் நமது வழக்கறிஞர் மூலம் எடுத்துரைத்தார்கள்.

போராட்டம் திரும்பப் பெற வேண்டும் என நீதிபதிகள் அச்சுறுத்தியபோதும், பொதுக்குழுவை கூட்டி முடிவெடுக்க வேண்டும் என்றும், கோரிக்கைகளுக்கு தீர்வு காண நீதிமன்றம் உத்திரவிட வேண்டும் என்றும் நாம் தெரிவித்தோம். போராட்டத்தை திரும்பப் பெற்றால் கோரிக்கைகளுக்கு தீர்வு காண தலைமைச் செயலாளரை ஆஜராக உத்தரவிடுவோம் என நீதிபதிகள் கூறியது நமது போராட்டத்திற்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

போராட்டத்தை தற்காலிகமாக மட்டுமே ஒத்தி வைக்க முடியும் எனத் தெரிவித்ததை நீதிபதிகள் ஏற்று, 21ஆம் தேதி தலைமைச் செயலாளரை நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிட்டது வரலாற்று நிகழ்வாகும்.

நமது கோரிக்கையும், போராட்டத்தையும் புறக்கணித்த தலைமைச் செயலாளரை நீதிமன்றத்தில் ஆஜராக செய்தது இந்தப் போராட்டத்தின் மிகப்பெரிய வெற்றியாகும். நீதிமன்றத்தின் இந்த உத்தரவினை ஏற்று வேலை நிறுத்தத்தை தற்காலிகமாக ஒத்தி வைத்தோம். செப்டம்பர் 21ஆம் தேதி தலைமைச் செயலாளர் நீதிமன்றத்தில் ஆஜராகி நமது கோரிக்கைகளை நிறைவேற்றிட கால அவகாசம் கேட்டார். நமது வழக்கறிஞர் உயர்திரு என்.ஜி.ஆர். பிரசாத் அவர்களின் வாதத் திறமையால் சில இடைக்கால உத்தரவுகளை நீதிமன்றம் பிறப்பித்தது.

நாம் நடத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டம் முழுமையாக தீர்வினை எட்டவில்லை என்றாலும், சில புதிய வரலாறுகளை படைத்துள்ளது.

- முதன்முறையாக நீதிமன்றத் தடையை மீறி வேலை நிறுத்தம் நடைபெற்றுள்ளது.
- முதன்முறையாக நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை சங்கத் தலைவர்கள் சந்தித்தனர்.
- முதன்முறையாக நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் எந்தவித மன்னிப்பும் கேட்கவில்லை; தண்டனையும் தரப்படவில்லை. நீதிமன்றம் அதைப் பற்றி கண்டுகொள்ளவில்லை.
- முதன்முறையாக அரசின் தலைமைச் செயலாளர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஆஜராக செய்தோம்.
- முதன்முறையாக கோரிக்கைகளுக்கு தீர்வு காண தேதி வரையறையை நீதிமன்றம் நிர்ணயித்தது.
- முதன்முறையாக போராட்ட களத்தில் எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தது.
- முதன்முறையாக போராட்ட காலத்திலேயே வேலை நிறுத்த நாட்களுக்கு சம்பளம் பிடித்தம் செய்யக் கூடாது என உத்தரவிட்டது.

அச்சமின்றி, ஊண்உறக்கமின்றி போராட்டத்தை தலைமை தாங்கி நடத்திய ஜாக்டோ-ஜியோ உயர்மட்டக் குழு தலைவர்களுக்கும், வட்ட, மாவட்ட, மாநிலத் தலைவர்களுக்கும், போராட்டத்தில் கலந்து கொண்ட மாசற்ற போர் வீரர்களான ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும்தான் இந்த வரலாற்றுக்கு சொந்தக்காரர்கள். அவர்கள் அனைவருக்கும் வீரம் செறிந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். பெற்ற வெற்றிகளை போராட்டக் களத்திலே உயிர் நீத்த ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் சமர்ப்பிக்கின்றோம். உங்கள் இலக்கினை எட்டுவோம் என உறுதி கூறுகிறோம்.

ஆயினும் நமது போராட்டம் இறுதி வெற்றியை இன்னும் அடையவில்லை. நமது உயிர் மூச்சான கோரிக்கைகளான புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து, சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் சத்துணவு, அங்கன்வாடி, ஊராட்சி செயலர், வருவாய் கிராம உதவியாளர்கள் போன்றோருக்கு காலமுறை ஊதியம் வழங்குதல் உள்ளிட்டவற்றை நீதிமன்றத்தின் மீது நம்பிக்கை வைத்து செப்டம்பர் 23 வரை காத்திருப்போம். இல்லையேல் தீர்வினை எட்டும் வரை நீதிமன்றத்தில் எந்த சமரசமுமின்றி நமது போராட்டங்கள் தொடரும். எந்த சக்தியாலும் பிரிக்க முடியாத, இணை பிரியாத அமைப்பாக ஜாக்டோ-ஜியோ தொடரும். நம்பிக்கையோடு காத்திருங்கள்.

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தலைவர் தோழர் இரா.முத்துசுந்தரம் அவர்களின் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு விழா நிகழ்ச்சித் தொகுப்பு அடுத்த இதழில்...

# இடைவிடாத போராட்டங்களால் உடைத்தெறியப்பபட்ட உதாசீனங்கள்



## தடையைத் தாண்டிய போராட்டம்

கூட இருந்தவர்களில் கொஞ்சம்பேர் விலகிச்சென்ற போதிலும், போராட்டகளத்தில் பொறுப்புணர்வோடு நின்று பொறுமையையும் போர்க்குணத்தையும் பறைசாற்றிய ஆசிரியப் பெருமக்களுக்கும் எடுத்த முடிவில் பிடித்த பிடி விடாமல் ''தடை''களைத் தாண்டி உரிமைக்கான உறுதியை உணர்த்திய அரசு ஊழியர்களுக்கும் புரட்சிகர வாழ்த்துக்கள்.

கடந்த சில நாட்களில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் ஆசிரியர் அரசு ஊழியர் ஒற்றுமைக்கும் உறுதிப்பாட்டிற்கும் விடுக்கப்பட்ட சவால்களே. 2016 முதல் நடந்து வரும் நிகழ்வுகளை கருத்தில் கொள்ளமல், முதல்வரின் உறுதிமொழியே முடிவான பலனைத் தரும் என்று, களத்திலிருந்து கழன்று கொண்டவர்களின் துரோகத்தையும், போராடும் உரிமை அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இல்லை என, அரசாங்கத்தின் அடாவடிகளை ஆய்வு செய்யாமலேயே தடாலடி இடைக்காலத் தடை விதித்த மதுரை உயர்நீதிமன்றக்கிளையின் உத்தரவையும் சாபங்களாகப் பார்க்காமல் சவால்களாக ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் எதிர்கொண்டதற்கான அடையாளம் தான் 8.9.2017ம் தேதி அடக்குமுறைகளுக்குப் பணியாமல் அனைவரும் போராட்டக்களம் நின்றது.

## போராட்டகளமும் போர்க்களமும் வேறு வேறல்ல

உரிமை மீட்பு என்று வந்து விட்டால் போராட்டக் களத்திற்கும் போர்க்களத்திற்கும் எந்த வேறுபாடும் கிடையாது என்ற அடிப்படைச் சித்தாந்தத்தோடு நாம் இந்த களத்தில் இருக்கிறோம் என்பதை போராட்டத்திற்கு வராதவர்களுக்கு, போராட்டத்திலிந்து விலகிக் கொண்டவர்களுக்கு அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் உணர்த்தி இருக்கிறார்கள். நீதிமன்ற தடைக்குப் பிறகும் 8.9.2017ம் தேதியும் 11.9.2017 முதல் 15.9.2017 முற்பகல்வரையும் நடந்த வேலைநிறுத்தப் போராட்டம் போராடுபவர்களின் மனஉறுதி என்ன என்பதை இந்த உலகிற்கு பறைசாற்றி இருக்கிறது. இதன் உறுதிப்பாடும் வலிமையும்தான் விலகிச் சென்றவர்கள் மெல்ல மெல்ல போராட்டக்களம் திரும்ப வழிவகுத்தது. சாதாரண ஆசிரியனையும் அரசு ஊழியனையும் இந்தப் போராட்டம் போர்வீரனாக மாற்றியிருக்கிறது. அதிகாரவர்க்கம் ஏவும் அடக்குமுறைகளும், அரசாங்கம் கூறும் பொய்யுரைகளும், நீதிமன்றம் போடும் தடைகளும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான சவால்களாக மாறியிருக்கின்றன. விரோதமோ, துரோகமோ, தடையோ, சிறையோ எந்த சவால்களாக இருந்தாலும் அதை எதிர்கொள்ளும் வீரமும் தீரமும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உண்டு என்பதை 1988, 2003 போராட்டங்களுக்குப் பிறகு இப்போது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த சவால்களை ஒன்றுபட்ட உறுதிப்பாட்டோடு உடைத்தெறிவதே அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் தலையாய நோக்கமாகவும் இருந்து வருகிறது.

## வையம் கண்டிராத உன்னத சக்தி

அதிகார வர்க்கத்திற்கு எதிராக சமரசமற்ற போராட்டங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கும் தொழிலாளர், உழைப்பாளர், ஊதிய வர்க்கம் போராட்டக்களத்தில் நிற்கும் வரைதான் அதற்கான உரிமைகள் உறுதிபடுத்தப்படும் என்பதை பறைசாற்றிய யூஜின் விடெப்ஸ் என்ற தொழிலாளி எழுதி வைத்த கவிதையின் சாரம் கிட்டத்தட்ட 110 ஆண்டுகளுக்குப் பிறகும் அப்படியே இருக்கிறது என்றால் அதற்குக் காரணம், இடைவிடாத போராட்டங்கள் மட்டுமே உழைப்பாளர், தொழிலாளர், ஊழியர் வர்க்கத்தினரின் உரிமைகளை நிலைக்க வைத்திருக்கிறது என்பதுதான். ''தொழிலாளர் இயக்கம் பத்தாயிரம் முறை விழும், எழும், அதன் குரல்வளை இறுக்கப்படும், தொண்டை அடைக்கப்படும், நீதிமன்றம் கேள்விக்கணைகளைத் தொடுக்கும், குண்டர்களால் தாக்கப்படும், பத்திரிகைகளால் வசைபாடப்படும், அரசியல்வாதிகளால் ஏய்க்கப்படும், கோழைகளால் நடுவீதியில் விடப்படும், துரோகிகளால் வஞ்சிக்கப்படும், தலைவர்களால்கூட விற்றுவிடப்படும். இவ்வளவு சோதனைகள் இருந்தாலும் இந்த வையகம் இதுவரை கண்டிராத உன்னத சக்தி வாய்ந்தது உழைக்கும் மக்களின் போராட்டம் ஒன்றுதான். ஆண்டான்டு காலமாக அடிமைப்பட்டிருக்கும் பாட்டாளிகளை விடுதலை செய்வதும், உரிமைகளை மீட்பதும் காப்பதும் இதன் வரலாற்றுக் கடமையாகும், இதன் வெற்றி சர்வ நிச்சயமே,'' என முடியும் அந்தக் கவிதை, இன்றைய அரசு ஊழியர் ஆசிரியர்களின் போராட்டச் சூழ்நிலையோடு அப்படியே பொருந்திப்போகிற ஒன்றாகியிருக்கிறது.



## எதிர்தரப்பினரின் கருத்தைக் கேட்காமலேயே தடை

போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராடினால் மக்கள் பாதிக்கப்படுவார்கள், அரசு ஊழியர்கள் போராடினால் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள், ஆசிரியர்கள் போராடினால் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள், தொழிலாளர்கள் வேலை நிறுத்தத் செய்தால் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள், விவசாயிகள் போராடினால் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று போராட்டங்களுக்குத் தடைவிதிக்கும் நீதிமன்றங்களுக்கு, போராடுபவர்கள் எல்லாம் மக்களாகத் தெரியவில்லை. இந்த நீதிமன்றங்கள் மக்கள் நலனுக்காக இல்லாமல் அரசாங்கத்தின் ஊழியர் விரோதப் போக்கிற்கு அரணாக இருக்கின்றனவோ என்ற ஐயப்பாடுகள் அவைகள் நமது தரப்பை கேட்மாலேயே தடைகள் விதிக்கும்போதும் உத்தரவுகள் போடும்போதும் ஏற்படத்தான் செய்கின்றன. 7.9.2017ம் தேதி மதுரை உயர்நீதிமன்றக் கிளையின் உத்தரவில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பிரச்னை என்ன? அவர்கள் எதற்காக போராடுகிறார்கள்? அவர்கள் போராட்டத்திற்கு அடிப்படை ஆதாரம் உள்ளதா இல்லையா? அவர்கள் எவ்வளவு காலமாக போராடுகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் ஒரு வார்த்தைகூட இல்லை. சாலையின் இடதுபக்கம் போக வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விதி. ஒருவன் சாலையின் வலப்புறம் போய்விட்டான் என ஒரு காவல்துறை அதிகாரி வழக்கு பதிவு செய்தால், அவன் ஏன் வலதுபுறமாகப் போனான் என்று விசாரிக்காமல், அவன் வலதுபுறம் போனது சட்டவிதிகளை மீறியதாகும் என நீதிமன்றம் அவனுக்கு அபராதம் விதித்தால் எப்படியிருக்குமோ அப்படித்தான் இருந்தது மதுரை உயர்நீதிமன்றத்தின் 7.9.2017ம் தேதிய இடைக்கால உத்தரவு. சாலையின் இடதுபுறத்தில் போக்குவரத்திற்கு இடையூறாக ஒரு பெரிய லாரியை நிறுத்தி வைத்துவிட்டு போலீஸ்காரர் சோதனை செய்துகொண்டிருந்தால் வாகன ஓட்டிகள் அசௌகரியத்துடன் சாலையின் வலப்புறமாக போகாமல் என்ன செய்ய முடியும்? அதுபோன்றதொரு உத்தரவுதான் மதுரை உயர்நீதிமன்றத்தின் உத்தரவும்.

## எந்திரத் தனமான உத்தரவுகள்

தப்பு செய்தவன் புத்திசாலி அதை தட்டிக் கேட்டவன் குற்றவாளி என்ற நிலையில் தற்போது அரசுஊழியர்கள் ஆசிரியர்கள் நடத்தி வரும் நியாயமான போராட்டத்தை கருத்தில் கொள்ளாமலேயே, அவர்கள் தரப்பை கேட்காமலேயே உயர்நீதிமன்றம் இப்படிப்பட்ட உத்தரவுகளை பிறப்பிக்கலாமா என்று மக்கள் மன்றத்தில் விவாதங்கள் எழுந்தன. சில மாதங்களுக்கு முன்பு இதே மதுரை நீதிமன்றத்தில்தான் போக்குவரத்து தொழிலாளர்கள் போராடுவது சட்டவிரோதம் என்றும் அவர்கள் வேலைக்கு திரும்பாவிட்டால் டெஸ்மா எஸ்மா சட்டங்கள் பாயும் என தீர்ப்புரைத்த நீதிபதிகளைக் கண்டோம் நாம். அதன்பிறகு மாயாண்டி என்ற ஓய்வுபெற்ற போக்குவரத்து ஊழியர் ஆறாண்டுகாலமாக ஓய்வூதியப்பலன்களைப் பெறாமல் அவதியுறுவது குறித்து தபால்கார்டில் நீதிபதிக்கு கடிதம் எழுதி, இப்படி உங்களில் ஒரு நீதிபதிக்கு ஆறாண்டு காலம் ஓய்வூதியம் வராமல் இருந்தால் நீங்கள் போராடாமல் இருப்பீர்களா? என கேள்வி எழுப்பிய பின்னர் தற்போது அது வழக்காக மாற்றப்பட்டு நீதிமன்றம் அரசை, போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஓய்வூதிய நிலுவை, ஊதிய உயர்வு பற்றி அவர்களுடன் பேசச்சொல்லி பணித்து வருகிறது. நீதிமன்றத்தின் தலையீட்டினால் மட்டுமே அந்த போராட்டம் தற்போது ஒரு சுமூக நிலையை எட்டியுள்ளது.

## அரசுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள்

தன் துறையில் தனக்கு ஏற்பட்ட பதவி பறிப்புக்காகவோ, வழங்கப்படாத பதவி உயர்வுக்காகவோ ஒரு ஊழியர் அரசுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் வாயிலாக போராட்டம் நடத்தி நீதிமன்றம் அவர்களில் பலபேருக்கு பணியும், பதவி உயர்வும் வழங்க உத்தரவிட்ட பின்னரும் அரசாங்கம் அந்த உத்தரவுகளை மதிக்காமல் கிடப்பில் போட்டு, சம்பந்தப்பட்ட ஊழியர்கள் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்து அது வாய்தாவுக்கு வரும் தேதியில் நீதிமன்றத்தின் உத்தரவுகளை அரசாங்கம் நிறைவேற்றுவதைக் கண்டிருக்கிறோம். இதுபோன்ற, அரசுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் ஆயிரக்கணக்கில் சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. ஆக அரசாங்கமே நீதிமன்றத்தின் உத்தரவுகளை மதிப்பதில்லை என்பதற்கு ஆதாரங்களை வேறெங்கும் தேடிச்செல்லத் தேவையில்லை. அதேபோல உச்சநீதிமன்றம் கர்நாடக அரசுக்கு காவிரி நீரை தமிழகத்திற்கு திறந்துவிடச் சொல்லி மூன்றுமுறை உத்தரவிட்டும் கர்நாடக அரசு அந்த உத்தரவை மதிக்கவில்லை. அதேபோல நீட் தேர்வுக்கு எதிராக தமிழகத்தில் நடைபெறும் போராட்டங்கள் அமைதியான முறையில் யாருக்கும் தொந்தரவில்லாமல் நடத்தப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டதை சென்னையில் உள்ள ஒரு பள்ளியின் மாணவிகள் பொருட்டாக கருதாமல் சாலைமறியல் செய்து சில மணி நேரம் போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்தார்கள், அதே தேதியில்தான் அரசு உழியர்கள் ஆசிரியர்கள் மதுரை உயர்நீதிமன்றக் கிளையின் உத்தரவை கருத்தில் கொள்ளாமல் 8.9.2017ம் தேதியும் போராட்டக் களத்தில் நின்றனர்.

இந்த நீதிமன்றத் தீர்ப்புகளும் அதன் விளைவுகளும் சொல்வதென்ன? இந்திய ஜனநாயகத்தில் கடைசி நம்பிக்கையாக மக்கள் நேசித்த நீதிமன்றங்கள் மக்களை விட்டு வெகுதூரம் சென்றுகொண்டிருக்கின்றன என்பதைத்தான். டாஸ்மாக் கடைகளை மூட உத்தரவிட வேண்டும் என்று மக்கள் போராடினால், நீதிமன்றம் போனால், ''அது அரசின் கொள்கை முடிவு அதில் நீதிமன்றம் தலையிட முடியாது.'' என்று மக்களுக்கு எதிராக உத்தரவு சொல்லும் நீதிமன்றம்தான், தலைக்கவசமில்லாமல் வாகனம் ஓட்டிச் செல்லும் இரண்டு சக்கர வாகன ஓட்டிகள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அரசிடம் கேட்கிறது. இப்படி மக்களுக்கு அசௌகரியம் எதுவோ அதை மட்டுமே செய்யும் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளை மக்கள் அதிர்ச்சியுடனும் அச்சத்துடனும் பார்க்கிறார்கள்.

### தனக்கு நீதி தரணிக்கு அநீதி

1.1.2016ஆம் தேதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஊதிய மாற்றத்தின் அடிப்படையில் மத்திய அரசு ஊழியர்கள் ஊதிய மாற்றமும், நிலுவையும் பெற்று விட்டார்கள். அதே மத்தியத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஐ.ஏ.எஸ் மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரிகளும்கூட ஊதிய மாற்றமும் நிலுவைத் தொகையும் பெற்றுவிட்டனர். மக்களுக்காக சேவை செய்வதாக கூறிக்கொள்ளும் முதல்வர் அமைச்சர்கள் உள்ளிட்ட எம்.எல்.ஏ.க்களும்கூட தங்களுக்கான சம்பள உயர்வை கொடி பிடிக்காமல், கோஷம் போடமல், கமிட்டி அமைக்காமல், அறிக்கை கேட்காமல், 100 சதவீதத்திற்கு மேல் உயர்த்திக் கொண்டுள்ள நிலையில், அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்களுக்கான ஊதிய மாற்றத்திற்காக போராடினால், அதிகார வர்க்கத்தினர், நடத்தை விதி மீறல் என்கிறார்கள், போராடத் தடை என்கிறார்கள், அலுவலகக் குறிப்பாணை கொடுக்கிறார்கள் இவற்றை எல்லாம் நீதிமன்றத்தின் மூலம் நியாயப் படுத்துகிறார்கள்.

### போராளி உருவாவதில்லை, உருவாக்கப்படுகிறான்

போராட்டம் என்ற ஒன்று வரும்போதுதான் அரசு ஊழியனோ ஆசிரியனோ ஒன்று காணாமல் போகிறான் அல்லது கண்டெடுக்கப்படுகிறான், இல்லையெனில் வேறொருவன் ஆகிறான், ஒரு கோஷம், ஒரு மறியல், ஒரு கைது, ஒரு விடுதலை, இவற்றின் மூலம், எதுவுமற்றவனாயிருந்தவன் எதிர்காலப் போருக்கான எல்லாத் தடவாளங்களையும் அவனுக்குள் தயாரித்துக் கொள்கிறான். கரப்பான் பூச்சிக்கு அஞ்சும் அவன்தான் காவல்துறையின் பூட்ஸ் கால்களை ஒரு ஈசலைத் தட்டுவதைப் போல் தட்டுகிறான். சிறைகளுக்குள்ள அடைபட்டுக் கிடந்தாலும் விடுதலைக்கான புரட்சிக் கவிதைகளை எழுதும் கவிஞனாகிறான், ஒரு துளி வியர்வைக்குக்கூட கைக்குட்டையைத் தேடும் அவன், போராட்டங்களில் லத்தி அடியில் உதிர்க்கும் செங்குருதியைக்கூட பன்னீர்துளிகளைப் போல உணரத் தலைப்படுகிறான். அடக்குமுறை ஏவும் அரசாங்கத்தின் பார்வையிலிருந்து ஒளியும் முயல்போல் ஒதுங்கிக் கிடந்தவன் சிலபோராட்ட அனுபவங்களுக்குப் பின் சிங்கம்போல சீறி எழுகிறான். போராட்டங்கள் பழையவனை சாகடிக்கிறது, போராட்டங்கள் அவனது அன்றாடங்களை மாற்றியமைக்கிறது. போராட்டங்கள் தான் நாடுகளைக் கட்டமைக்கிறது. போராட்டங்கள்தான் இப்போதைய தலைமுறைக்கான இருப்பையும் எதிர்காலச் சந்ததிக்கான நெருப்பையும் அடைகாத்து வைக்கிறது. எனவே போராட்டம் மட்டுமே உரிமைகளை மீட்டெடுப்பதற்கான வழி. உணர்வுகளை மதிப்பதற்கான மொழி. அதைத்தான் அரசு ஊழியர் ஆசிரியர் சமுதாயம் இப்போது செய்து கொண்டிருக்கிறது.

### வெற்றிக்கான சக்கர வியூகம்

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணை 15.9.2017ம் தேதி மதுரை உயர்நீதிமன்றத்தில் நடந்தபோது வெற்றிக்கான சக்கர வியூகத்திற்குள் அரசாங்கத்தை நிற்க வைத்துவிட்ட நிம்மதி அன்றைய இடைக்கால உத்தரவின் மூலம் கிடைத்தது. இரண்டு வருட காலமாக இடைவிடாத இயக்க நடவடிக்கைகளுக்குப் பின்னர் அரசு ஊழியர் ஆசிரியர் போராட்டம் இப்போது மிக முக்கியமான கட்டத்தை எட்டியிருக்கிறது. அரசு அவர்களுக்கு நியானமாகத் தர வேண்டிய உரிமைகளுக்காகத்தான் இப்போது அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் போராடிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையில் சொல்லப்போனால் இல்லாத ஒன்றையோ அல்லது அரசு சொல்லாத ஒன்றையோ கேட்டு அவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்தவில்லை.

2016ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே நமது உரிமைகளுக்கான தீ பற்றி எரிய ஆரம்பித்து விட்ட போதிலும் சட்ட மன்ற விதி எண்.110ன் கீழான அறிவிப்பு, சாந்தா ஷீலா நாயர் அவர்கள் தலைமையில் வல்லுநர் குழு, ஊதிய மாற்றத்துக்கான அலுவலர் குழு போன்றவற்றின் மூலமாக நமக்கு தரவேண்டிய உரிமைகளை கொடுக்காமல் காலம் கடத்தி வந்ததற்கான காரணத்தை சொல்லி வந்தது இவ்வரசு. புதிய ஓய்வூதிய திட்டத்திற்கான வல்லுநர் குழுவின் காலவரை நீட்டிப்பு, ஊதிய மாற்றக்குழுவின் காலவரை நீட்டிப்பு போன்றவற்றின் மூலம் நம்முடைய பொறுமைகள் சோதிக்கப்பட்டன.

### திரிசங்கு சொர்க்கமும், நம்பிக்கை துரோகமும்

அரசிடம் பலமுறை கோரிக்கை மனுக்கள் கொடுத்தும் பேச்சுவார்த்தை நடத்தியும் பலகட்ட இயக்கங்களை முன்னெடுத்தும் அரசு அவற்றை பரிசீலிக்க முன் வராததோடு மட்டுமல்ல, ''நிச்சயம் செய்வோம், கூடிய விரையில் செய்வோம், கண்டிப்பாக செய்வோம்'' போன்ற நம்பிக்கை துரோக ஐஸ்கட்டிகளால் அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களயும் திரிசங்கு சொர்க்கத்தில் தொங்கவிட்டு வேடிக்கை பார்த்தது இவ்வரசு.

ஒரு கட்டத்திற்கு மேல் நடப்பது நம்பிக்கை துரோக நாடகம் என்பதை எல்லோரும் புரிந்து கொண்டு உரிமைகளுக்காக உரத்துக் குரல் கொடுத்த போது, ''நாடே வறட்சியில் இருக்கிறது, அரசு நிதிநிலை நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது, போராட்டம் நடத்தினால் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள். உங்களுக்கான உரிமைகளை அறிக்கை வந்ததும் கொடுத்துவிடுவோம்'' என்று நாடகமாடினார்கள்.

### பொறுமையான, உறுதியான நடவடிக்கைகள்

அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்களுடைய கோபம் என்ன என்பதை அரசுக்கு காட்ட ஆர்ப்பாட்டம் நடத்தினர். சென்னையில் பேரணி நடத்த முயன்று காவல்துறை பேரணிக்கு மறுத்ததால் அதை ஆர்ப்பாட்டமாக மாற்றினர். தமிழ்நாடே வியந்து பார்த்த அந்த ஆர்ப்பாட்டத்தில் லட்சக்கணக்கான ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் கலந்து கொண்டு அரசுக்கு எச்சரிக்கை மணி அடித்தனர். ஆகஸ்ட் 22ல் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை நடத்தி அரசுக்கு இறுதி எச்சரிக்கை செய்தனர். பல லட்சம் ஊழியர்களும் ஆசிரியர்களும் ஒன்றுபட்டு உணர்வுபூர்வமாக அதில் கலந்து கொண்டு அரசுக்கு அபாயச் சங்கு ஊதினர். ஆனால் அரசாங்கமோ, அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் போராட்டம் நடத்தினால் மாணவர்களும் பொது மக்களும் பாதிக்கப்படுவார்கள், நிர்வாகம் ஸ்தம்பிக்கும் என்பதை எல்லாம் அறிந்திருந்தும் அவர்களை அழைத்துப் பேசி போராட்டத்தை தொடங்க விடாமலோ தொடரவிடாமலோ செய்ய முன்வராததோடு அதை பொருட்படுத்தாமல் வேறு வேலைகளில் மூழ்கியதால் நமது கோபம் எல்லை மீறியது. கடைசி முயற்சியாக காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கு முன்பாக 4.9.2017இல் சென்னையில் அமைச்சர்களையும் மற்றும் 6.9.2017இல் ஈரோட்டில் முதல்வரையும் ஜாக்டோ ஜியோ நிர்வாகிகள் சந்தித்துப் பேசியபோதும் முதல்வர் மக்கள் நலனை மனதில் கொண்டாவது நமது நியாயமான கோரிக்கைகளில் ஒன்றைக்கூட நிறைவேற்ற முன்வராத நிலையில் காலவரையற்ற வேலை நிறுத்தம் நம்மீது திணிக்கப்பட்டது.

### ஊடகங்கள் ஆடிய நாடகங்கள்

ஊடகங்கள் அலறின. ஊடக நெறியாளர்கள் கொதித்தனர். விவாதங்கள் பொறி பறந்தன. சமூக ஆர்வலர்கள் கூட, அரசு ஊழியர் ஆசிரியர் போராடலாமா? பொதுமக்கள் என்னாவது? மாணவர்கள் எதிர்காலம் என்னாவது? எனக் கேட்கத் தலைப்பட்டனர். ஊடக நெறியாளர்கள் ஒருபடி மேலே போய் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பொறுப்பற்று நடந்து கொள்கிறார்கள் என வசைபாடினர். இதன் காரணமாக பொதுமக்களும் இவர்கள் போராட்டத்தைக் கண்டு முகம் சுளித்தனர். இவர்களில் யாரும் அரசாங்கத்தையோ அது அழைத்துப் பேசாததையோ வெறும் சம்பள உயர்வுக்காகவா லட்சக்கணக்கான அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் போராடுகிறார்கள் என்பதை ஆராய்ந்து விளங்கிக் கொள்ளவோ முயற்சிக்கவில்லை. லட்சக்கணக்கான ஊழியர்கள் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியத்தை தெரிந்து மட்டுமல்ல, தங்கள் ஊதியதை இழந்து போராட்டம் நடத்துகிறார்கள் என்பது இவர்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? ஆனால் இத்தனை நெருக்கடிகளுக்கு மத்தியிலும், மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் உத்தரவை மீறி போராட்டத்தை தொடர்ந்ததோடு மட்டுமல்ல, தொடர்ந்து களத்தில் நின்று, நியாயமாகப் போராடும் தங்கள்மீது எந்த நடவடிக்கை வந்தாலும் ஏற்றுக் கொள்வோம் எனக்கூறி அரசாங்கத்தையும் நீதிமன்றத்தையும் எதிர்த்து நின்ற அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஒவ்வொருவரின் துணிச்சலும் மன உறுதியும் நெகிழத் தக்கது.

### நீதிமான்கள் வழி சொல்ல வேண்டும்

வரலாறுகள் மாறுவதாக கூறப்பட்டாலும் உண்மை நிலை அதுவல்ல. வரலாறுகள் மாற்றியமைக்கப் படுகின்றன. ஒவ்வொரு போராட்டமும் ஒவ்வொரு யுத்தி. ஒவ்வொரு போராட்டமும் ஒரு அனுபவம். இந்திய வரலாற்றிலும் சரி உலக வரலாற்றிலும் சரி நீதிமன்றம் தடை விதித்து அந்தத் தடையை மீறி அரசாங்கத்தில் பணிபுரிபவர்கள் நடத்திய ஒரு காலவரையற்ற போராட்டம் என்பது இதுவாகத்தான் இருக்கும். எங்கே உரிமைகள் சட்டங்களால் மறுக்கப்படும் நிலை உருவாகுமோ அங்கே அவை புரட்சிகளால் உடைக்கப்படும் என்ற உண்மை இந்தப் போராட்டத்தின் மூலம் உறுதி படுத்தப்பட்டுள்ளது. போராடுவது அடிப்படை உரிமையல்ல என்ற ஒரு சிறிய வட்டத்தோடு மட்டும் நீதிமன்றங்களும் நீதிபதிகளும் நின்றுவிடுவது நியாயங்களுக்கும் தர்மங்களுக்கும் அவர்கள் இழைக்கும் அநீதி. போராடுவது அடிப்படை உரிமையல்ல என்று கூறுபவர்கள் மறுக்கப்பட்டும் தொழிலாளிகளின் உரிமைகளை அவர்கள் எப்படிப் பெற வேண்டும் என்பதையும் கூற வேண்டும். அவர்களை போராடவிட்டது யார் தவறு? அது அரசாங்கத்தின் அல்லது எஜமானர்களின்

தவறாகும். உரிமைகளை தர மறுக்கும் இவர்ளை யார் கேட்பது? போராடுவது அடிப்படை உரிமையல்ல என பேசும் நிதிமன்றங்கள் கூடவே இதற்கான வழியையும் கூற வேண்டும். அதுவும் ஒப்புக்கொண்ட உரிமையை கொடுக்க மறுக்கும் அரசாங்கத்தை எதிர்த்து போராட வேண்டுமா? போர் தொடுக்க வேண்டுமா என்பதையும் இந்த நீதிமான்கள் தெரிவிக்க வேண்டும்.

அரசாங்கம் என்ன செய்தது? அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் என்ன செய்தார்கள்? என்பதை சம்பந்தப்பட்ட தரப்பினரை விசாரித்து அறியாமலேயே போராட்டத்துக்கு தடை விதிப்பது நியாயமானதாக இல்லை. அதுதான் இந்தப் போராட்டத்தில் நடந்தது. சட்டங்கள் அதிகாரங்களால் உருவாக்கப்படலாம், செயல்படுத்தப்படலாம் ஆனால் நியாயங்களால் அவை மீறப்படும் என்பதையும் பெரும்பான்மைகளின் முன் அதிகாரங்கள் மண்டியிட்டே ஆகவேண்டும் என்பதையும் இப்போராட்டம் இவ்வுலகிற்கு உணர்த்தியுள்ளது. பெரும்பான்மை உள்ள இடத்தில் பெரும்பான்மை சொல்வதே சட்டமாகும். இதுதான் ஜல்லிக்கட்டு போராட்டத்திலும் நடந்தது.

### வரலாற்றின் புதிய அத்தியாயம் எழுதப்பட்டது

இந்தப் போராட்டத்தில் வரலாற்றின் புதிய அத்தியாயம் ஒன்றும் எழுதப்பட்டுள்ளது. நீதிமன்ற அவமதிப்புக்காக 15.09.2017ம் தேதி ஆஜரான போராட்டக்குழுத் தலைவர்கள் தங்கள் தரப்பு நியாயங்களை தங்கள் வழக்குரைஞர் மூலம் நீதிமன்றத்தின் முன் தெளிவுபடுத்திய பின் நீதிமன்றம் விழித்துக் கொண்டது. தவறு, போராட்டம் நடத்துபவர்கள் மீது அல்ல, அது அரசாங்கத்தின் மீது உள்ளது என்பதை. அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தரப்பில் நியாயம் இருந்ததாலேயே அவர்கள் தம்முடைய போராட்டத்தை விலக்கிக்கொள்ள மறுத்துவிட்டதும், அரசுத்தரப்பில் மத்தியஸ்தம் செய்து நமக்கான உரிமைகளை பெற்றுத்தருவதாக நீதிமன்றம் உறுதியளித்ததன் பேரில் இந்தப் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்க ஒப்புக் கொண்டதும் நடந்தது. நீதிமன்ற வழக்கிலோ, நீதிமன்ற அவமதிப்பு வழக்கிலோ இத்தகையதொரு உத்தரவு இதுவரை வந்ததில்லை. இருந்த போதிலும் செய்தித் தாள்களிலும் ஊடகங்களிலும் ''நீதிமன்றம் கண்டிப்பு. அரசு உழியர் ஆசிரியர் போராட்டம் வாபஸ்'' என்றே தவறான சித்தரிப்புகளுடன் செய்திகள் வெளியாகின. அவை பற்றி நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. விமர்சகர்களுக்கு சிலை வைத்ததாக வரலாறில்லை.

### புதிய வரலாறுகளைப் படைத்த போராட்டம்

இந்த போராட்டம் பல புதிய வரலாறுகளை ஏற்படுத்தியுள்ளது. அரசு ஊழியர் ஆசிரியர் ஒன்றுபட்டு போராடிய வரலாற்றில் இதுவரை நீதிமன்ற தடையை மீறி எந்தப் போராட்டமும் நடந்ததில்லை. இந்தப் போராட்டம் நடந்தது. அதற்குக் காரணம் ஒவ்வொரு அரசு ஊழியர் ஆசிரியர் மத்தியிலும் நீதிமன்றம் நமது தரப்பை கேட்காமலேயே தடை விதித்துவிட்டதே என்ற கோபம்தானே தவிர மற்றபடி நீதிமன்ற உத்தரவை மதிக்கக்கூடாது என்பதல்ல.

காலவரையற்ற வேலை நிறுத்தம் தொடங்குவதற்கு முன்னர் ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பிலிருந்து சில அமைப்பினர் போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் முதல்வர் வாக்குறுதியை ஏற்று போராட்டத்தை கைவிட்டு வெளியேறிய போதும் பெரும்பான்மையான அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் ஜாக்டோ ஜியோவின் ஒருங்கிணைப்புக் குழுவை மாற்றி அமைத்து போராட்டம் நடத்தினர். எங்கு ஒரு பிரிவினர் பிரிந்து போனதால் இருக்கும் ஊழியர்களிடம் பய உணர்வு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தை துச்சமென நினைத்து முன்னெடுத்த போராட்டம் அரசு ஊழியர் ஆசிரியர் வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு மதுரை உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்து வழக்கை ஒத்தி வைத்தபின்பு ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் தலைவர்கள் பலரும் போராட்டத்தை கைவிடுவது என்று முடிவெடுக்க இருந்த நிலையில்... ஊழியர்கள் ஆசிரியர்கள் மத்தியிலிருந்து எக்காரணம் கொண்டும் போராட்டத்தை கைவிடக்கூடாது என்று வெகுண்டெழுந்த போர்க்குணம், போராட்டத்தை கைவிட நினைத்த தலைவர்களின் சிந்தைனையில் மடை மாற்றத்தை ஏற்படுத்தியது. வழக்கமாக தலைவர்கள் ஒன்றுகூடி போராட்டத்தை தொடரலாமா வேண்டாமா என்று அடுத்த கட்ட நடிவடிக்கையை தீர்மானிப்பதே வழக்கம். ஆனால் இம்முறை அவ்வழக்கத்தை கீழ்மட்டத்திலிருந்த தொண்டர்கள் மாற்றி கண்டிப்பாக போராட்டத்தை தொடர வேண்டும் என்று தலைவர்களை நிர்பந்தித்த வரலாறும் இதுவரை அரசு ஊழியர் ஆசிரியர் இயக்கங்கள் கண்டிராத ஒன்றாகும்.

அடுத்ததாக தடையை மீறி தொடரப்பட்ட அவமதிப்பு வழக்கில் ஆஜரான நமது மூத்த வழக்குரைஞரின் வாதத் திறமையாலும் நமது நியாயமான நடவடிக்கைகளாலும் அவமதிப்பு நடவடிக்கைகள் நம்மீது மேற்கொள்ளப்படாமல், நமது போராட்டத்தை நீதிமன்றம் நிறுத்தி வைக்கக் கேட்டுக் கொண்ட வரலாறும் இதுவரை இந்திய அரசியல் வரலாற்றில் நிகழாத ஒன்றாகும். நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றில் ஒரு

நீதிமன்றம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு அரணாக நின்று அரசாங்கத்தை பணித்ததும் தலைமைச் செயலாளரை நீதிமன்றத்தின் முன்பு ஆஜராக உத்தரவிட்டதும் முற்றிலும் புதிய வரலாறாகும்.

21.9.2017ம் தேதி நீதிமன்றம் ஆஜரான தலைமைச் செயலாளரை கேள்விக் கணைகளால் துளைத்து அரசு ஊழியர் ஆசிரியர் உரிமைகளை குறிப்பிட்ட காலவரைக்குள் நிறைவேற்றிடப் பணித்த வரலாறும், போரரட்டத்தில் கலந்து கொண்ட நாட்களை பணிசெய்த நாளாக கருதி சம்பளம் வழங்க உத்தரவிட்ட வரலாறும், போராட்டத்தில் ஈடுபட்ட அரசுஊழியர்கள் ஆசிரியர் மீது எடுக்கப்பட்டிருக்கும் நிர்வாக நடவடிக்கைகளை மறு உத்தரவு வரும் வரை நிறுத்தி வைக்க உத்தரவிட்ட வரலாறும் கூட அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் இதுவரை கண்டிராத ஒன்றே.

30.9.2017க்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என அரசாங்கம் நீதிமன்றத்திடம் உறுதிமொழி அளித்ததும், அந்த பரிந்துரையின் பேரில் ஊதியமாற்றத்தை 13.10.2017ம் தேதிக்குள் ஏற்படுத்த வேண்டும் என்றும் அவ்வாறு ஏற்படுத்த இயலாத நிலையில் இடைக்கால நிவாரணத்தை 22.10.2017ம் தேதிக்குள் அறிவிக்க வேண்டும் என்றும் தவறினால் 23.10.2017ம் தேதி வாய்தா நாளில் நீதிமன்றமே இடைக்கால நிவாரணம் குறித்த உத்தரவை பிறப்பிக்க நேரிடும் என்று நீதிமன்றம் ஆணையிட்ட நிகழ்வும் கூட இதுவரை கண்டிராத பதிய வரலாறே.

நம்முடைய போராட்டத்தை கொச்சைபடுத்தி நமது ஒற்றுமையை சீர்குலைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டு நாம் போராடி வாங்கிய உரிமைகளை அவர்கள் அரசாங்கத்திடம் பேச்சுவார்த்தை நடத்தி வாங்கிவிட்டதாக மார்தட்டிக் கொள்ளும் அரசு அலுவலர் ஒன்றியம் உள்ளிட்ட ஜால்ரா சங்கத் தலைவர்களும், ஜாக்டோ ஜியோவை உடைக்கப் பார்த்து அது முடியாத நிலையில் நாங்கள்தான் உண்மையான ஜாக்டோ ஜியோ என்று ஊடகங்களுக்கு செய்தி கொடுத்து போராட்டத்தை திசை திருப்பப் பார்த்த கணேசன் இளங்கோவன் உள்ளிட்ட போராட்ட களத்திலிருந்த புறமுதுகிட்டு ஓடிய தொடை நடுங்கிதலைவர்கள் இப்போது நம்முடைய போராட்டம் மூலம் நீதிமன்றத்தின் வாயிலாக அரசுக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டு குறிப்பிட்ட தேதிக்குள் நமது பிரதான கோரிக்கைகளின் பேரில் அரசு நடவடிக்கை எடுக்க நமக்காக நீதிமன்றம் முன் வந்துள்ளதைக் கண்டு முகத்தில் கரி பூசப்பட்ட கபடதாரிகள் இஞ்சி தின்ற குரங்குகளைப் போல் ஒளிந்து கொண்டுவேடிக்கை பார்த்து வருகிறார்கள். உண்மையான அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் போராட்டத்தை அதன் உக்கிரத்தை மழுங்கடிக்கப்பார்க்கும் இதுபோன்ற கருங்காலிகளை அடையாளம் கண்டுகொள்வதோடு அவர்களுக்கு சரியான பாடம் கற்பிக்க வேண்டும்.

30.9.2017ம் தேதிக்குள் பரிந்துரை அளிக்கப்பட்டதும் அது உடனடியாக பரிசீலிக்கப்படும் என முதலமைச்சர் உறுதி கொடுத்துள்ளதாக தெரிவித்த கணேசன், இளங்கோவன், சண்முகராஜன் ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டு அரச ஊழியர்கள் ஆசிரியர்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தினார்கள். இவர்களின் கூட்டறிகை வெறும் வெத்துவேட்டு என்பது நீதிமன்றத்தில் அரசுக்காக ஆஜரான வழக்குரைஞர் தன் வாதுரையின் போது ஊதிய மாற்றப் பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றதும் அதன் பேரில் நடவடிக்கை எடுக்க அரசுக்கு நான்கு அல்லது ஐந்து மாதங்கள் தேவைப்படும் என்று தெரிவித்ததும் அதற்கு நீதிமன்றம் ஒப்புக்கொள்ளாமல் 13.10.2017க்குள் நிறைவேற்ற வேண்டும் என்று தெரிவித்ததையும் இத்தகைய கருங்காலிகள் எண்ணிப் பார்க்க வேண்டும். முதலமைச்சர் அவர்களுக்கு உறுதி மொழி கொடுத்திருந்தால் அரசு வழக்குரைஞர் ஏன் நீதிமன்றத்தில் நான்கு அல்லது ஐந்து மாதங்கள் காலக்கெடு கேட்க வேண்டும்? ஆக இதிலிருந்து இக்கருங்காலிகள் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எதிராக செயல்படுவது இப்போது ஆதாரத்துடன் நிரூபணமாகியுள்ளது. இத்தகையோரை தனிமைப்படுத்தி அவர்கள் திருந்தவும் வருந்தவும் செய்ய நாம் வழி காண வேண்டும்.

### கோரிக்கைகள் நிறைவேறும் வரை களத்தில் இருப்போம்

தோழர்களே இதுவரை நடந்துள்ள நீதிமன்ற நடவடிக்கைகள் நமக்கு சாதாகமாகவே அமைந்துள்ள போதிலும் இதன் பிரதான வழக்கில் தீர்ப்பு வரும்போது மட்டுமே நம்முடைய உரிமைகள் கோரிக்கைகள் போராட்டங்களுக்கான உண்மையான பலன் என்ன என்பது தெரியவரும். தற்போது வழங்கப்பட்டுள்ள இடைக்கால உத்தரவு நமக்கு சாதாகமாக உள்ளதாலேயே நாம் வென்று விட்டதாக எண்ணி நம்முடைய போராட்டங்களை விட்டுவிட முடியாது. நமக்கான கோரிக்கைள் அனைத்தும் நிறைவேற்றப்படும் வரை நாம் நம்முடைய ஒற்றுமையையும் உறுதிப்பாட்டையும் ஒன்றிணைந்து காக்க வேண்டும். இந்தப் போராட்டம் ஒரு சைக்கிள் பந்தயம் போல. இலக்கை அடையும் வரை பெடலை மிதித்துக் கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சைக்கிளிலிருந்து குப்புற கீழே தள்ளப்பட்டுவிடுவோம் என்கிற எச்சரிக்கை உணர்வோடு நீதிமன்றத்தின் அடுத்த கட்ட நிகழ்வுகளை உன்னிப்பாக கவனிப்போம். உரிமைகளை பெறுவதில் உறுதியுடன் இறுதி வரை ஒற்றுமையுடன் களம் நிற்போம்.

## வேலை நிறுத்த காலத்திற்கு ஊதிய பிடித்தம் / ஒழுங்கு நடவடிக்கை குறித்து அரசின் கடிதம்

**URGENT**
**FOR PERSONAL ATTENTION**

Personnel and Administrative Reforms (K) Department,
Secretariat,
Chennai-600 009.

**Letter No.23689/K1/2017-1, dated 17.08.2017**

From
Dr.Girija Vaidyanathan., I.A.S.,
Chief Secretary to Government.

To
All Secretaries to Government,
Departments of Secretariat, Chennai - 600 009 /
Heads of Departments / District Collectors.

Sir / Madam,

Sub: Service Associations of State Government Employees - Proposed 'One day Token Strike' on 22.08.2017 called for by certain recognized / un-recognized associations - Participation of State Government Employees / Teachers - Instructions - Issued.

Ref: 1. U.O.Note No.89103/Ser.K/1983-3, Personnel and Administrative Reforms (Ser.K) Department, dated 03.09.1984.
2. Government letter No.105654/K2/91-1, Personnel and Administrative Reforms (K) Department, dated 18.12.1991.

******

I am directed to state that information has been received that certain recognized and un-recognized Associations of State Government employees have proposed to observe 'one day token strike' on 22.08.2017 pressing for certain demands.

2. I am directed to invite your attention to the earlier instructions issued by the Government in the references cited and to point out that a 'strike or threat of strike' or participation by Government Servants in strike or demonstration or any other form of agitation, affecting the normal functioning of the Government offices, amounts to violation of rules 20, 22, and 22 A of the Tamil Nadu Government Servants' Conduct Rules,1973.

3. I am, therefore, directed to request you to impress on the Government staff members of your department that they should not indulge in violation of the provisions of the Tamil Nadu Government Servants' Conduct Rules, lest disciplinary action will be taken against them. If any of the Government Servants have not attended office, consequent of their participation in the proposed one day token strike on 22.08.2017 or any other day organized by recognized and unrecognized Service Associations of the Teachers and Government Employees, their period of absence has to be considered as unauthorized and they are not entitled to the pay and allowances on the basis of the principle **'No Work - No Pay'**, as per the instructions issued in the reference first cited. The part time employees, those on daily wages and on consolidated pay, will be liable to be discharged from service.

(P.T.O)

4. I am, therefore, directed to request that besides ensuring that no Government Servant violates the Tamil Nadu Government Servants' Conduct Rules,1973, disciplinary action should also be taken promptly for unauthorized absence from duty by the employees. In this connection, it is also informed that application for **'Casual Leave'** or any other leave other than medical leave shall not be allowed on the day of strike.

5. I am also request you to watch the position and report the facts about the violation of the Tamil Nadu Government Servants' Conduct Rules,1973, in this regard by any of the Government Servants' in your department on 22.08.2017 or any other day.

6. In this connection, all the Heads of Departments may send a report on the attendance position in respect of the staff working in the offices under their administrative control to the Government in Secretariat Department concerned, in the proforma given below by 10.15 a.m. on 22.08.2017 without fail.

7. The Secretariat departments are requested to send the attendance details of Officers/ Staff in their department and consolidated details in respect of Head of the Departments, **separately**, in the proforma given below by 10.30 a.m. to the Personnel and Administrative Reforms Department.

**Proforma**

| Sl. No. | Name of Dept.,/Estt | Total strength in all categories | No.of present | No.of absent | No.of persons on authorised leave | Percentage of absence | Percentage of attendance |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | | | | | |

8. This may be treated as **'Most Immediate'**.

Yours faithfully,

R. Jayanthi
17.8.2017

for Chief Secretary to Government

# நீதிமன்ற ஆணையின்படி வேலை நிறுத்த காலத்திற்கு ஊதியம் வழங்கிட அரசு கடிதம்

**URGENT**

**FOR PERSONAL ATTENTION**

Personnel and Administrative Reforms (K) Department,
Secretariat,
Chennai-600 009.

**Letter No.23689/K1/2017-6, dated 27.09.2017**

From
Dr.Girija Vaidyanathan., I.A.S.,
Chief Secretary to Government.

To
All Secretaries to Government, Departments of Secretariat, Chennai -9 / Heads of Department / District Collectors.

Sir / Madam,

Sub: Service Associations of State Government Employees - Indefinite Strike called for by certain recognized / un-recognized associations from 07.09.2017 - Participation of State Government Employees / Teachers - Treatment of period of absence and disciplinary proceedings - Implementation of the orders of the Hon'ble Madurai Bench of Madras High Court - Instructions - Issued.

Ref:
1. U.O.Note No.89103/Ser.K/1983-3, Personnel and Administrative Reforms (Ser.K) Department, dated 03.09.1984.
2. Government letter No.105654/K2/1991-1, Personnel and Administrative Reforms (K) Department, dated 18.12.1991.
3. Government letter No.23689/K1/2017-1, Personnel and Administrative Reforms (K) Department, dated 17.08.2017
4. Government letter No.23689/K1/2017-2, Personnel and Administrative Reforms (K) Department, dated 07.09.2017.
5. Orders of the Madurai Bench of Madras High Court, in W.P.(MD) No.16814 of 2017 and W.M.P.(MD)No. 13417 of 2017, dated 07.09.2017.
6. Government letter No.23689/K1/2017-3, Personnel and Administrative Reforms (K) Department, dated 08.09.2017.
7. Government letter No.23689/K1/2017-4, Personnel and Administrative Reforms (K) Department, dated 11.09.2017.
8. Orders of the Madurai Bench of Madras High Court, in C.P.(MD)No.1674 of 2017 in W.M.P.(MD)No. 13417 of 2017, in W.P.(MD) No.16814 of 2017, dated 21.09.2017.

******

I am directed to invite your attention to the references cited.

2. In the Government letters 4th, 6th, and 7th cited, among other things, following instructions were issued in view of the indefinite strike called for by certain recognized / un-recognized associations from 07.09.2017:-

(i) to consider the period of absence of the Government Servants / Teachers due to their participation in the strike as unauthorized and they are not entitled to the pay and allowances on the basis of the principle of 'No Work- No Pay' to the said period;

(ii) to take disciplinary action against them for their unauthorized absence and in violation of provisions of Tamil Nadu Government Servants' Conduct Rules, 1973.

3. In the reference 8th cited, among other things, the Hon'ble Madurai Bench of Madras High Court has passed interim orders as below:-

(i) *there shall be a direction to the Government to keep the disciplinary proceedings initiated against the employees on account of their strike pending until further orders.*

(ii) *the learned Advocate General, on instructions from the Chief Secretary to Government who is present in Court, submitted that there would not be any cut in salary, in case the employees are prepared to work on Saturdays to compensate their absence. The said undertaking is recorded.*

4. In the above circumstances, the Secretaries to Government / Heads of Department / District Collectors / Appointing authorities / Disciplinary authorities concerned are instructed to:-

(i) keep the disciplinary proceedings initiated against the Government Employees / Teachers who participated in the strike as per the instructions issued in reference 4th cited pending, until further orders / instructions.

(ii) sanction salary to the Government Employees / Teachers for the period of absence due to their participation in the strike, subject to condition that the Government Employees / Teachers have to be prepared to work on Saturdays / holidays to compensate the period of their absence.

In this connection, the Secretaries to Government / Heads of Department / District Collectors are requested to instruct the Heads of Office to draw a compensatory work schedule on Saturdays / holidays to compensate the absence due to strike and to monitor the work done on the scheduled dates.

(iii) In case, the Salary bills for the month have already been presented in the Pay and Accounts Office / Treasury Office, deducting the days of absence due to strike, supplementary bills may be prepared after drawing compensatory work schedule as indicated above.

(iv) A consolidated report on the above matter may be obtained and maintained by the Secretaries to Government concerned.

5. The Commissioner of Treasuries and Accounts is requested to give necessary instructions to the Pay and Accounts Officers / Treasury Officers for admitting the bills in this regard.

Yours faithfully,

K. Jayammy 27.9.2017

for Chief Secretary to Government.

27.9.17

# நேதாஜி அறிவித்த இந்திய அரசு!

நேதாஜி சுபாஷ் சந்திர போஸால் 1942ல் இந்திய தேசிய இராணுவம் முறையாக உருவாக்கப்பட்டது. ஒரு படைத்தள பிரிவு, 3 கொரில்லாப் படைப்பிரிவுகளோடு துணை மற்றும் சிறப்புப் பிரிவுகளையும் கொண்டிருந்தது.

போரின் முதல் நிலையில் பிரிட்டிஷாரால் புறக்கணிக்கப்பட்ட, கொரில்லா நடவடிக்கையிலேயே பெரும்பாலும் பயிற்சி இருந்தது. ஜெனரல் மோகன்சிங்குக்கும் ஜப்பானியர்களுக்குமிடையே அடிப்படை வேறுபாடு தோன்றியதால் சீக்கிரமே இந்திய தேசிய இராணுவத்தில் நெருக்கடி ஏற்பட்டது. இதில் மூன்று இந்திய அதிகாரிகள் படையை விட்டு ஓடியதால் இந்த நெருக்கடி பெரும் பிரச்சனையாக வெடித்தது. இம்மூன்று அதிகாரிகளும் பர்மாவிற்கு அங்குள்ள நிலைமையை ஆராய அனுப்பி வைக்கப்பட்டனர். ஆனால் எல்லையைத் தாண்டிய உடன் அவர்கள் பிரிட்டிஷ் படையில் சேர்ந்து இந்திய தேசிய இராணுவம் உருவாக்கப்பட் டுள்ளது என்பதையும் இந்தியாவைத் தாக்கும் அதன் திட்டங்கள் அனைத்தையும் அவர்களுக்கு தெரியப்படுத்தி விட்டனர். மேலும் ஜப்பானியர் கள் இந்திய தேசிய இராணுவத்தை ஒரு துணைப் படையாக அறிவிப்பது என்ற உறுதிப்பாட்டையும் மதித்து நிறைவேற்றவில்லை. ஜப்பானியர்களால் கேப்டன் மோகன்சிங்கும் மற்ற சில அதிகாரிகளும் பொதுமக்களும் கைது செய்யப்பட்டனர்.

ஜெர்மனியில் ஜப்பானியத் தூதரால் சுபாஷ் சந்திர போஸை பெர்னிலிருந்து தென்கிழக்கு ஆசியாவிற்கு, சுமத்ராவிற்கு வந்து சேர்ந்தார். இந்திய அதிகாரிகளால் மட்டுமே தலைமையேற்று நடத்ததப்படக்கூடிய இந்திய தேசிய இராணுவத்தை ஒரு துணைப்படையாக நடத்த வேண்டும் மேலும் இந்திய மண்ணில் கால் வைத்தவுடன் ஜப்பானியர்களால் எவ்விதமான தலையீடுகளும் இருக்கக்கூடாதென்ற முழு உறுதிமொழியை ஜப்பானின் பிரதம மந்திரி, ஜெனரல் டோஜாவிடமிருந்து பெற்ற பிறகே, அவர் சுமத்ராவிலிருந்து டோக்கியோவுக்குச் சென்றார்.

அச்சுநாடுகள் அனைத்தும் சுயமுயற்சியை இழந்துவிட்டதால், அனைத்து போர் முனைகளிலும் முறியடிக்கப்பட்டன. சோவியத் மீதான தாக்குதல் அவர்களுக்கு மிக அதிகமான இழப்பை ஏற்படுத்தியது. காரணம் சோவியத்தில் கடைசி ஆண் அல்லது பெண் இருக்கும் வரையில் போரில் உயிரைக் கொடுக்கத் தயாராக இருந்தனர். நேசநாடுகள் வான்படைகள், பீரங்கிப் படைகள், நீர்மூழ்கிக் கப்பல்கள், அனைத்துவிதமான போக்குவரத்து சாதனங்கள் அனைத்தையும் பெற்றிருந்தன. மறுபுறம், ஜப்பானியர்கள் தங்கள் வீரர்களுடைய போர் புரியும் உந்துதலைத் தவிர வேறெதையும் கொண்டிருக்கவில்லை. அனைத்தையும் செலவழித்திருந்தனர்.

போஸ் இந்தியத் தேசிய இராணுவம் மனச் சோர்வடையவும் மேலும் ஆயுதந்தாங்கிய போராட்டத்தைக் கைவிடவும் எவ்வித காரணமுமில்லை என்று கருதினார். 1943, ஜூலை 3 ஆம்நாள் சிங்கப்பூரில் அவர் வந்து சேர்ந்தது முதல் இந்திய சுதந்திர லீக்கின் தலைவர் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். உடனே வீரர்களையும் பொருட்களையும் மொத்தமாக திரட்டுவதற்கு ஓர் அறைகூவல் விடுத்தார்.

இந்திய தேசிய இராணுவத்தின் பலம் மூன்று வாரங்களில் இரண்டு மடங்கானது. காரணம் இதுவரை வாய்ப்புகள் மறுக்கப்பட்டு வந்த இராணுவத்தினரல்லாத பொதுமக்களும் படை வீரர்களாக நியமிக்கப்பட்டனர். 1943, அக்டோபர் 21 அன்று, ஆஸாத் ஹிந்த-ன் ஒரு தற்காலிக ஆட்சியை அமைப்பதாக சுபாஷ் அறிவித்தார். தென்கிழக்கு ஆசியாவின் இந்தியர்களால் கொடையாகக் கொடுக்கப்பட்ட பணம் மற்றும் தங்கம் போன்றவற்றில் இருந்து ஆஸாத் இந்த் வங்கியைத் துவங்கினார். இந்த வங்கியால் ஜெர்மனி, ஜப்பானிய அரசாங்கங்களிடமிருந்து கடனாகப் பெற்ற அனைத்துப் பணத்தையும் திருப்பிக் கொடுக்க முடிந்தது. அதோடு இந்திய தேசிய இராணுவத்திற்கான செலவுகளுக்காகவும் பணம் செலுத்த முடிந்தது. ஜான்சிராணி ரெஜிமெண்ட் என்ற ஒரு புதிய பெண்களின் படைப்பிரிவை ஏற்படுத்தியது அவரால் எடுக்கப்பட்ட புரட்சிகரமான முடிவு. இதனால் ஆணும் பெண்ணும் சமம் என்று இந்தியாவிற்கு மட்டுமல்லாது உலகிற்கே கோடிட்டுக் காட்டினார்.

*1943*, ஆகஸ்டு *15* நேதாஜி வடக்கு மலேயா விலுள்ள பகதூர்குழு பயிற்சி முகாமிற்குப் பயணித்து, அவர்களின் பயிற்சி எந்த அளவிற்கு முன்னேறியுள்ளது என்பதைப் பார்வையிட்டார்.

*1944* பிப்ரவரி *13* அன்று பிரிட்டிஷ் படையின் மீது தாக்குதல் நடத்த ஆணைகள் வழங்கப் பட்டன. கடுமையான சண்டைக்குப் பின் அதில் பிரிட்டிஷாருக்கு அதிக அளவில் சேதம் விளை விக்கப்பட்டது.அதே நேரத்தில் இந்தியதேசிய இராணுவத்தின் சேதம் மிகக் குறைவாகவே இருந்தது. எனவே பிரிட்டிஷார் பள்ளத்தாக்கில் பின்வாங்கினர். இந்திய தேசிய இராணுவம் கென்னடி சிகரத்தைக் கடந்து மணிப்பூரில் நுழைந்தது. இந்திய தேசிய இராணும் மற்றும் ஜப்பானியப் படைகளின் ஒருங்கிணைந்த படைகள் கோஹிமா மற்றும் இம்பால் வரையில் முன்னேறின.ஒருங்கிணைந்த படையின் மற்றொரு குழு திட்டின்ரோடு என்ற இடத்தை நோக்கி முன்னேறிச் சென்று, யாய்ஜோக் திங்கைபீய், சர்ச்சந்தபூர் ஆகிய பிரிட்டிஷின் பாதுகாப்புத் தளங்களைக் கைப்பற்றியது. பிரிட்டிஷ் படைகள் மொய்ராங் மற்றும் அதன் சுற்றுப் புறப் பகுதி களிலிருந்து கட்டாயமாகப் பின்வாங்க வேண்டியிருந்தது.

இந்திய தேசிய இராணுவத்திற்கு மணிப்பூர் மக்கள் இதயப்பூர்வமான ஒத்துழைப்பைக் கொடுத்தனர். பணம் எதுவும் வாங்காமல் உணவுப் பொருட்களை வழங்கினர். மொய்ரீங் இந்திய தேசிய இராணுத்தின் முன்னேறும் தளமாக ஆனது. அங்கு, *1944* ஆகஸ்டு *18* அன்று இந்திய மூவர்ணக்கொடி பறக்கவிடப்பட்டது. கேப்டன் ஹரக்சிங், தீப்சந்த்சிங், நாகி அகமது சௌத்ரி, லெப்டினென்ட் சென்குப்தா ஆகியோர் இந்தப் போர்க் காரியங்களில் ஈடுபட்ட மற்ற இந்திய தேசிய இராணுவத்தினராவர். ஜப்பானின் தொடர்பு அதிகாரி லெப்டினென்ட் இடோவும், லெப்டினென்ட் ஆண்டோவும் இருந்தனர். இந்திய தேசிய இராணுவமும், ஜப்பானியப் படைகளும் ஒன்று சேர்ந்து, பிரிட்டிஷ் வலுவான நிலையில் அமர்ந்திருந்த பிஷன்பூரைக் கைப்பற்ற முயற்சி செய்தது . மிகப்பெரிய சண்டை நடந்தது. இதில் நமது சேதம் மிக அதிகமாகும். பிரிட்டிஷ் படை மிகப்பெரிய தளவாடங்களைக் கொண் டிருந்ததாலும் அவர்களை அங்கிருந்து விரட்ட முடியவில்லை. மணிப்பூரின் இளைஞர்கள் பலரும், சில பெண்களும் இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்து தோளோடு தோள் நின்று போரிட்டனர். துரதிருஷ்டவசமாக இந்திய தேசிய இராணுவத்தினரின் எண்ணிக்கை பிரிட்டிஷாரை விட மிகக் குறைவாகவே இருந்தது. அதோடுகூட, பருவமழையும் அதன் காலத்திற்கு முன்பே துவங்கியபடியால், படைவீரர்கள் சேறு சகதிகளில் சிக்கித் துயருற் றனர்.

*1944*, ஜுன் *13* அன்று பின்வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. போக்குவரத்து வசதி இல்லாததால் களைப்படைந்த காயமடைந்து நோயுற்ற படைவீரர்கள் குடிநீருமின்றி நடந்தே சென்றனர். அவர்களில் பலர் புரயோடிய காயங்களாலும் மலேரியாவினாலும் வயிற்றுப் போக்கினாலும் வழியிலேயே இறந்துவிட்டனர். நேதாஜி இவர்களுக்கான மருந்துப் பொருட்கள் மற்றும் உணவுடன் தங்கியிருந்த மாட்னலே என்ற இடத்திற்கு மீதியிருந்தவர்கள் வந்து சேர்ந்தனர்.

கர்னல் சௌகத் அல் முல்லிக் நேதாஜியால் இந்திய தேசிய இராணுவத்தின் மிகப்பெரிய சர்தார்-இ-ஜங்க்' என்ற விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். மற்றும் பல வீரர்களும் அதிகாரிகளும் கௌரவிக்கப்பட்டனர்.

டிசம்பர் மாத இறுதியில் வடக்கு பர்மாவில் பிரிட்டிஷின் முன்னேற்றத்தைத் தடுக்கும் வகை யில் மற்றொரு தாக்குதல் பகதூர் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

இதுவும் வெற்றி பெறவில்லை. தாய்லாந்திற் குப் பின்வாங்கி இறுதியில் பிரிட்டிஷாரிடம் சரணடைந்தனர். இவ்வாறு இந்திய சுதந்திரத்தின் ஆயுதந் தாங்கிய போராட்டத்தின் பிரகாசமான அத்தியாயம் முடிந்தது.

*1944* ஏப்ரல் *18* அன்று இந்திய தேசிய இராணுவப் படைவீரர்கள் பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்திடமிருந்து இம்பாலுக்கு அருகிலுள்ள மொய்ராங் பகுதியை விடுவித்தனர். இப் போராட் டத்தில் சுமார் *21000* வீரர்கள் உயிர்த்தியாகம் செய்தனர். அன்றைய நாளிலேயே இம்பாலுக்கு அருகிலிருந்து தற்காலிக இந்திய அரசு தனது பணிகளைத் தொடங்கியது. இந்திய தேசியப் படையின் ராணி ஜான்சி ரெஜிமென்ட், கேப்டன் லட்சுமி செகல் தலைமையின் கீழ் இருந்தது.

*1998* ஏப்ரல் *12* அன்று கேப்டன் லட்சுமி செகலுக்கு அவருடைய பணிகளுக்காக இந்தியக் குடியரசுத் தலைவரால் பத்ம விபூஷன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

**பெரணமல்லூர் சேகரன்**

# போராட்டங்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் கருத்துரைப்பது ஏற்புடையதா?

## (முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி திரு.டி.ஹரிபரந்தாமன்)

அரசமைப்புச் சட்டத்தின்படி நீதிமன்றங்கள் வழங்கும் உத்தரவுகள், தீர்ப்புகளைத் தவிர, நீதிபதிகள் சிலர் வாய்மொழியாகத் தெரிவிக்கும் கருத்துகள் விவாதத்துக்கு உள்ளாகியுள்ளன. நீட் தேர்வு எதிர்ப்புப் போராட்டத்துக்குத் தடை விதிக்க முடியாது என்ற உச்ச நீதிமன்றம், சட்டம் ஒழுங்கு பாதிக்காதபடி நடத்தலாம் என்று கூறியது. அதையடுத்து, அரசு ஊழியர் போராட்டம் தொடர்பான வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கிருபாகரன், அதிக ஊதியம் வாங்கும் அரசு ஊழியர்கள் போராடக்கூடாது என்றெல்லாம் குறிப்பிட, அது சர்ச்சையாகி உள்ளது.

அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையான போராடும் உரிமையை கூடாது என நீதிபதி கூறுவதற்கு சட்ட முகாந்திரம் உள்ளதா என்பது குறித்து எழுத்தாளர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள் என பல தரப்பினரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது குறித்து உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி ஹரிபரந்தாமன் அவர்கள் கூறுவதைப் பார்ப்போம்.

“ஜி.எஸ்.மணி என்ற வழக்குரைஞர், நீட் தேர்வை எதிர்த்து தமிழகத்தில் போராட்டம் நடத்தக்கூடாது என்று ஒரு பொதுநல வழக்கை உச்ச நீதிமன்றத்தில் போட்டார். இந்தப் போராட்டங்கள் சில அரசியல் கட்சிகளின் ஆதாயங்களுக்காக நடத்தப்படுவதாகக் கூறினார். இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம், செப்டம்பர் 8ஆம் தேதி ஓர் உத்தரவு பிறப்பித்தது.

முதலில், நீட் தேர்வை எதிர்த்த போராட்டம் வேண்டாம் என்று கூறும் திரு. ஜி.எஸ். மணியின் கோரிக்கையில், அரசியல் ஆதாயம் இல்லையா? மத்திய அரசும் மாநில அரசும் கோருவது அதைத் தானே?

உச்ச நீதிமன்றம், மேற்சொன்ன இடைக்கால உத்தரவில், அமைதியான முறையில் போராடும் உரிமையை அடிப்படை உரிமையாக அரசமைப்புச் சட்டம் வழங்கி இருப்பதால், வன்முறையின்றி போராடலாம் என்று கூறியது. ஆனால் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படாதபடி நீட் தேர்வை எதிர்த்து போராட்டங்கள் நடத்தலாம் என்றும் சட்டம் ஒழுங்கு பாதிக்கையில் அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 19, இந்திய மக்களுக்கு சில அடிப்படை உரிமைகளை வழங்குகிறது. குறிப்பாக, பிரிவு 19(1) (ஏ), கருத்து சுதந்திரத்தை வழங்குகிறது. 19(1)(பி), ஆயுதமின்றி அமைதியாகக் கூடுவதற்கான உரிமையை வழங்குகிறது. அதாவது, பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், கண்டனக் கூட்டங்கள், தர்ணாக்கள், ஆர்ப்பாட்டங்கள் என்று மக்கள் கூடி கருத்துகளை அமைதியான வழியில் தெரிவிக்கும் உரிமையை, அரசமைப்புச் சட்டம் அடிப்படை உரிமையாக வழங்குகிறது.

ஆனால், அரசமைப்புச் சட்டம் பிரிவு 19(2) கருத்துரிமைக்கு சில கட்டுப்பாடுகளை விதிக்கிறது. அத்தகைய கட்டுப்பாடுகளில், அரசமைப்புச் சட்டம் குறிப்பிடுவது என்னவென்றால், பொது ஒழுங்கை (public order) குலைக்கும் வகையில், கருத்துச்சுதந்திரத்தைப் பயன்படுத்தக் கூடாது என்பதுதான்.

அரசமைப்புச் சட்டம், சட்டம் ஒழுங்கை (law and order) பாதிக்கும்நிலை இருந்தால், கருத்துரிமையைப் பயன்படுத்தக்கூடாது என்று ஏதும் கூறவில்லை. அதற்கு மாறாக பொது ஒழுங்குக்கு குந்தகம் விளைவிக்காமல் கருத்துச்சுதந்திரம் இருக்கவேண்டும் என்கிறது.

சட்டம் ஒழுங்கு என்பது வேறு, பொது ஒழுங்கு என்பது வேறு. சட்ட ஒழுங்குப் பிரச்னை என்பது மிகச் சாதாரணமானது. அதைக் கூறி, அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையைப் பறிக்க முடியாது. ஆனால் பொது ஒழுங்குக்கு பாதிப்பை உண்டாக்கும்வகையில் கருத்துச் சுதந்திரத்தைப் பயன்படுத்த அரசமைப்புச் சட்டம் அனுமதிக்கவில்லை.

பொது ஒழுங்குக்குக் குந்தகம் என்பதை விளங்கிக்கொள்ள, மூன்று உதாரணங்களைப் பார்க்கலாம்.

அரியானாவில் குர்மீத் ராம் ரகிம்சிங் சாமியார் வழக்கில் தீர்ப்பு சொல்வதற்கு நீதிபதி தனி

ஹெலிகாப்டரில் செல்லும் அளவுக்கு அங்கு நிலைமை மோசமாக இருந்தது. பொதுச் சொத்துக்கு மிகுந்த சேதம் ஏற்படுத்தப்பட்டது. 30-க்கும் மேற்பட்டோர் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டது. அதாவது பொது ஒழுங்கு (public order) பாதிக்கப்பட்டது. இம்மாதிரி பொது ஒழுங்கு பாதிக்கப்படும்போது, ஒருவர், அரசமைப்புச் சட்டம் கருத்துரிமையை அடிப் படை உரிமையாக வழங்குகிறது என்றும் மேற் சொன்னபடியான பொது ஒழுங்கை பாதிக்கும் கூட்டத்தில் கலந்துகொள்வேன் என்றும் கூற முடியாது. பொது ஒழுங்கை பாதிக்கும் அந்த மாதிரியான கூட்டங்களை, போராட்டங்களைத் தடுக்க அரியானா அரசும் முன்வரவில்லை. எவரும் உயர் நீதிமன்றத்தையோ உச்ச நீதிமன்றத் தையோ அணுகி, இப்படிப்பட்ட பொது ஒழுங்கை பாதிக்கும் கூட்டத்தைத் தடுக்க வேண்டும் என்று கோரவும் இல்லை.

இரண்டாவதாக, முன்னர் கன்னையாகுமார் வழக்கில் உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி நேரில் விசாரிக்கச் சென்ற மூத்த வழக்கறிஞர்களையும் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் களையும் பேராசிரியர்களையும் உச்ச நீதிமன்றத்தி லிருந்து 500 அடி தொலைவே உள்ள பாட்டியாலா நீதிமன்ற வளாகத்தில் இந்துத்துவாவாதிகள் தாக்கியபோது, உச்ச நீதிமன்றமோ டெல்லி உயர் நீதிமன்றமோ ஏதும் செய்யவில்லை. நீதிமன்றத்தி லேயே தாக்குதல் நடத்துவது பொது ஒழுங்குக் குக் குந்தகம் இல்லையா?

மூன்றாவதாக, 2002-ல் குஜராத்தில் அப்பாவி இந்துக்கள் கோத்ரா ரயிலில் தீவைத்து எரிக்கப் பட்ட பின், அவர்களின் சடலங்களை ஊர்வலமாக எடுத்துச்சென்றதை அடுத்து, சுமார் 2 ஆயிரம் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர். பொதுச்சொத்துக்களுக்கு இழப்பும் உயிரிழப்பும் ஏற்பட்டது. இது, பொது ஒழுங்குக்கு பாதிப்பை ஏற்படுத்திய நிகழ்வு. எனவே, கருத்துரிமை எனும் பெயரால் அப்படி ஒரு பிண ஊர்வலத்தை நடத்தமுடியாது.

ஆனால் அதே நேரத்தில் சட்டம் ஒழுங்கைப் பற்றி கீழ்வரும் உச்ச நீதிமன்ற வழக்கு தெளி வாக்கும்.

இந்து பத்திரிகைக் குழுமமானது, ‘ஒரே ஒரு கிராமத்திலே’ எனும் தமிழ்த் திரைப்படத்தைத் தயாரித்தது. அத்திரைப்படம், அரசமைப்புச் சட்டம் வழங்கும் இட ஒதுக்கீட்டுக்கு எதிராகப் பேசுகிறது; இது தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை பாதிக்கும் என்று காரணம் கூறி, சென்னை உயர் நீதிமன்றம் இத்திரைப்படத்தைத் திரையிடுவதற் கான அனுமதிச் சான்றை ரத்துசெய்து தீர்ப்பளித் தது. இந்தத் திரைப்படத்தின் தயாரிப்பாளர், தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் முறை யிட்டார்.

இம்மேல்முறையீட்டை விசாரித்த உச்ச நீதிமன்றம், ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை அளித்தது. அதில், அரசமைப்புச் சட்டம் இந்திய மக்கள் அனைவருக்கும் கருத்துச்சுதந்திரத்தை அடிப்படை உரிமையாக வழங்கியுள்ளது என்றும் அந்த அடிப்படை உரிமையை எந்த அரசும் சட்டம் ஒழுங்கு எனக் காரணம்கூறி பறிக்கமுடியாது என்றும் அப்படிப் பறிக்கமுயன்றால் உயர் நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றமும் அரசின் அச்செயலை ரத்துசெய்வதுடன் அரசமைப்புச் சட்டம் வழங்கும் அடிப்படை உரிமையைத் தூக்கிப்பிடிக்கவேண்டும் என்றும் கூறியது.

ஆனால் கடந்த 2 ஆண்டுகளாக, நீட் எதிர்ப்புப் போராட்டம் அமைதியாக, வன்முறையின்றி, அறவழியில், காந்திய வழியில் நடைபெறுகிறது. மேற்சொன்ன உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின், தமிழக அரசு அமைதிவழியில் போராடு பவர்களை வழக்குப்போட்டு கைதுசெய்யப் பயன்படுத்திக் கொள்கிறது. தமிழக அரசின் செயல், உச்ச நீதிமன்றம் ‘ஒரே ஒரு கிராமத்திலே’ வழக்கில் வழங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்புக்கு விரோதமானது.

தமிழக ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் மத்திய அரசு ஊழியர்களுக்கு 01-01-2016 முதல் ஊதியத்தைத் திருத்தி கூடுதல் ஊதியம் அளித்த தைப் போல, பறிக்கப்பட்ட ஓய்வூதிய உரிமை யைத் திருப்பி அளிக்கவேண்டும் என்றும் அமைதி யான வழியில் வன்முறையின்றிப் போராடு கின்றனர்.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 19(1) (C), சங்கம் வைக்கும் உரிமையை அடிப்படை உரிமையாக வழங்குகிறது. சங்கம் வைக்க அடிப்படை உரிமையை அளித்துவிட்டு, அமைதியாகக்கூடப் போராடக்கூடாது என்றால் அது பெரிய மோசடித் தனம், அல்லவா?

போராட்டம் தொடர்பாக அரசு ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது வேறு. ஒழுங்கு நடவடிக்கை எடுத்து என்ன தண்டனை வேண்டு மானாலும் அளிக்கலாம். தண்டனையை எதிர்த்து ஊழியர்கள் உயர் நீதிமன்றத்துக்குத்தான் வர வேண்டும். எனவே போராட்டத்தைப் பற்றி உயர்

நீதிமன்றம் நடுநிலைமை வகிக்கவேண்டும்; போராட்டம் பற்றி கருத்து ஏதும் சொல்வது சரியாகாது.

போராட்டத்தை எதிர்த்து நீதிமன்றம் கருத்துக் கூறினால், ஊழியர்களுக்கு நீதிமன்றத்தின் மீது எப்படி நம்பிக்கை உண்டாகும்? ஆனால் ஒரு விசயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். போராட்டத்தில் வன்முறை ஏதும் இருக்கக் கூடாது.

ஒரு முறை, பாரத் பெட்ரோலியம் நிறுவன வேலைநிறுத்தம் நடந்தபோது, நீதிபதி சந்துரு விடம், போராட்டம் சட்டவிரோதம் என அறிவிக்குமாறு வழக்கு வந்தது. அதற்கு உனக்குத் துணையாக வராது என அவர் தீர்ப்பு கூறிவிட்டார். என்னிடம் நெய்வேலி என்.எல்.சி. போராட்டத்தின்போது இப்படியொரு மனு வந்தபோது, போராடும் தொழிற்சங்கங்களுக்கு நோட்டீஸ் அனுப்பி, பதில் கேட்டு உத்தரவிட்டு, இரண்டு வாரத்துக்கு விசாரணையைத் தள்ளி வைத்தேன். ஆனால் அதிகாரிகள் தரப்பில், பெஞ்சுக்குச் சென்று போராட்டத்துக்குத் தடை வாங்கிவிட்டார்கள். அந்த உத்தரவை 10 ஆயிரம் தொழிலாளர்களும் எதிர்த்தார்கள். அவர்கள் அத்தனை பேரையும் அழைத்து அவமதிப்பு வழக்கா போடமுடியும்? எனவே, அரசமைப்புச் சட்டத்தின்படி பொது ஒழுங்கு கெடாதபடி நீதிமன்றங்கள் அக்கறை செலுத்துவது வேண்டும்'' என்று மீண்டும் மீண்டும் அழுத்தமாகச் சொன்னார், நீதிபதி ஹரிபரந்தாமன்.

அவருடைய வார்த்தைகள் அரசமைப்புச் சட்டத்தின் மீதான அக்கறையையும் மரியாதை யையும் வெளிப்படுத்துகின்றன.

## 01.07.2017 முதல் அகவிலைப்படி உயர்வு உடனே வழங்குக

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தல்!

மத்திய அரசு, அதன் ஊழியர்களுக்கு 7வது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை 1.1.2016 முதல் அமல் படுத்தி, மத்திய அரசு ஊழியர்கள் 1.1.2016 முதல் ஊதிய மாற்றத்தையும் அதற்கான நிலுவைத் தொகைகளையும் பெற்று விட்டனர். மேலும் அவர்களுக்கு 01.07.2017ம் தேதி முதல் புதிய ஊதிய மாற்றத்திற்கான அகவிலைப்படி உயர்வு 1 சதவீதத்தையும் மத்திய அரசு கொடுத்துவிட்டது. இதுவன்றி, மத்திய அரசின் 7வது ஊதிய மாற்றத்திற்கான ஊதிய விகிதங்களை பெறாமல் பழைய ஊதிய விகிதத்திலேயே ஊதியம் பெற்றுக் கொண்டிருக்கும் மத்திய அரசின் கீழ் இயக்கும் தன்னாட்சி நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு பழைய ஊதிய விகிதத்தில் 3 சதவீத அகவிலைப்படியை 01.07.2017ம் தேதி முதல் உயர்த்தி மத்திய அரசு 26.09.2017ம் தேதி உத்தரவிட்டுள்ளது.

01.01.2016 முதல் தமிழக அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள், தாங்கள் பெற வேண்டிய ஊதிய மாற்றத்தையோ, அதற்கான நிலுவைத் தொகையையோ கடந்த 21 மாதத்களாக பெறாமல் கடுமையான நிதிச்சுமைக்கு ஆளாகியுள்ளனர். தமிழக அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான 8வது ஊதிய மாற்றத்திற்கான அலுவலர் குழுவை அமைப்பதற்கும், அது அமைக்கப்பட்ட பின்னர் அதன் பரிந்துரைகளை குறித்த காலவரைக்குள் சமர்ப்பிக்க தர்ணாக்கள், ஆர்ப்பாட்டங்கள் போன்ற பலவித இயக்க நடவடிக்கைகள் நடத்தியும், கடைசியில் அது பரந்துபட்ட அரசு ஊழியர், ஆசிரியர்களின் ஒன்றுபட்ட பேரெழுச்சியாக உருவெடுத்து, வேலைநிறுத்தப் போராட்டமாக பரிணமித்த பின், நீதிமன்றத் தலையீட்டால் கண்டிப்பான காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட பின் தற்போது முதன்முறையாக சொன்ன காலவரையரைக்குள் அலுவலர் குழு தனது பரிந்துரையை சமர்ப்பித்துள்ளது . இந்த பரிந்துரைகள் காலதாமதமாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டாலும், அறிக்கையில் வழங்கப்பட்ட பரிந்துரைகள் என்ன என்பது தெரியாத போதிலும் நீதிமன்ற உத்தரவுக்குப் பின்னர் இன்று (27-09-2017) அலுவலர் குழுவின் இறுதி அறிக்கை அரசிடம் சமர்ப்பித்துள்ளது.

இந்நிலையில் இதன்காரணமாக தமிழக அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் கடுமையான நிதித் தேவைக்கு ஆளாகியுள்ளனர். மேலும் தீபாவளி பண்டிகை தினம் நெருங்கி வரும் வேளையில் தமிழக அரசு ஊழியர்களின் இந்த கடினமான நிலையை கருத்தில் கொண்டு, மத்திய அரசு பழைய ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறும் தன் ஊழியர்களுக்கு 01.07.2017ஆம் தேதி முதல் அகவிலைப்படி உயர்வு அளித்துள்ளது போல், தமிழக முதல்வரும் தமிழக அரசு ஊழியர்களுக்கு 01.072017 முதல் பழைய ஊதிய விகிதத்தின் அடிப்படையில் அகவிலைப்படியை உயர்த்தி, உடனடியாக அறிவித்திட வேண்டுமென்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தி கேட்டுக்கொள்வதோடு, ஜூலை 2017 முதல் செப்டம்பர் 2017 வரையிலான மூன்று மாதகால அகவிலைப்படி உயர்வு நிலுவைத் தொகையை தமிழக அரசு ஊழியர்கள் ரொக்கமாகப் பெற்றுக் கொள்ளவும் உத்தரவிட வேண்டுமென்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

# சீசரின் மனைவியும், சீதையின் கணவனும்!

## நீதிமன்ற தீர்ப்புகள் விமர்சனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியது

## விழிப்புணர்வு பெருகிவிட்ட காலத்தின் கட்டாயமே

கடந்த சில நாட்களாக அரசு பணியில் அல்லது அரசு சார்ந்த பணியில் இருக்கும் ஊழியர்கள் சிலர் மீது, அவர்கள் நீதிமன்றங்கள் குறித்தும், நீதிபதிகள் குறித்தும், நீதிமன்ற வழக்குகள் குறித்தும், சங்க கூட்டங்களில் பொது இடங்களில் தரம் தாழ்ந்து பேசியதாகக் கூறி காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இத்தகைய நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவர்களின் அறிவுறுத்தலின் பேரிலோ, வற்புறுத்தலின் வாயிலாகவோ மட்டுமே நடைபெற்றிருக்கவே வாய்ப்புகள் உண்டு.

பொதுவாகவே, நீதிமன்ற உத்தரவுகள் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவை என்ற கருத்து கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பு வரை இருந்து வந்துள்ளது. ஆனால், தகவல் தொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சியாலும், பொதுமக்களிடம் கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியாலும், நீதிமன்ற உத்தரவுகள் முதல் நினைவேந்தல் சொற்பொழிவுகள் வரை விமர்சனத்திற்கு ஆளாக்கப்பட்டு வருகின்றன.

கருத்து சுதந்திரம் என்ற சுதந்திரக் காற்றை மக்கள் இப்போதுதான் மாசின்றி சுவாசிக்க ஆரம்பித்துள்ளனர் என்றால் அது மிகையில்லை. ஆனால் நீதிமன்றங்களும், அரசு எந்திரமும் தங்கள் மீதான விமர்சனங்களை சகித்துக்கொள்ளும் மனப்பக்குவம் கொள்ளவில்லை என்பதையே இத்தகைய கைது நடவடிக்கைகள் உணர்த்துகின்றன. காலமாற்றங்கள், உண்ணும் உணவை, உடுத்தும் உடையை, பழக்க வழக்கங்களை, பண்பாட்டை மாற்றி வரும் வேளையில் கருத்துச் சுதந்திரத்திற்கு மட்டும் கடிவாளம் போடப் பார்ப்பது மாற்றுக் கருத்து சொல்பவர்களை ஏற்க முடியாத ஏதேச்சதிகார போக்காகும்.

நீதிமன்ற உத்தரவுகளை சமீப காலமாக மக்களும், மற்றவர்களும் விமர்ச்சிக்க ஆரம்பித்துள்ள போக்கை நீதிமன்றங்கள் கவனித்துள்ளனவா என்று தெரியவில்லை. ஒரு கால் நூற்றாண்டுக்கு முன்பு ஒரு நீதிமன்ற தீர்ப்பு வந்தால் அது "உண்மைதான்" என்று மக்கள் நம்பியிருந்த நிலை பிறகு "உண்மைதானா?" என சந்தேகப்பட வைத்து, இப்போது "உண்மையா? பொய்யா?" என விவாத களத்தில் அமர்ந்து விமர்சிக்கும் இடத்திற்கு வந்துள்ளது. இந்த கருத்து மாற்றத்திற்கு காரணம் நீதிமன்றங்களின் நடவடிக்கைகளே.

சாமான்ய மக்கள் மிகப்பெரிய நம்பிக்கை கொண்டிருந்த இந்நாட்டு நீதிமன்றங்கள் மெல்ல மெல்ல அந்நம்பிக்கையை இழந்து வருகின்றன என்ற நிதர்சனத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். காவிரி நீர் விவகாரத்தில் மூன்றுமுறை உச்சநீதிமன்றம் தண்ணீர் திறந்துவிடக் கூறியும் அந்த உத்தரவுகளை கர்நாடக அரசு மதிக்காத நிலையில் அது குறித்து உச்சநீதிமன்றமேகூட எந்த நடவடிக்கையும் எடுக்காததோ அல்லது எடுக்க இயலாததோ தமிழக மக்கள் மனதில் நீதிமன்றங்களின் மேல் இருந்த நம்பிக்கையை சிதைக்க வைத்த மிகப்பெரிய காரணங்கள்.

நீதியரசர்கள் கவர்னர்களாவதும், ஜெயிலுக்கு போவதும், வெகுஜன மக்களின் உணர்வுகளை மழுங்கடிக்கும் வகையில் அதிகாரம் படைத்தவர்களுக்கு ஆதரவாக தீர்ப்புகள் வருவதும், வெளிப்படைத் தன்மை இல்லாததும் நீதிமன்றங்களின் மேல் மக்கள் வைத்திருந்த நம்பிக்கைகள் சரியக் காரணங்கள் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

ஜல்லிக்கட்டுக்கு தடை வந்தபோது அதை பெரும்பான்மை மக்கள் சக்தி உடைத்தெறிந்ததும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்திற்கு போடப்பட்ட தடையை, அது அவர்கள் தரப்பை கேட்காமலேயே போடப்பட்ட தடை என்பதாலும், தங்கள் தரப்பில் உள்ள மிகப்பெரிய நியாயத்தின் காரணமாகவும் அவர்கள் அதை பொருட்படுத்தாததும் அதற்கான நீதிமன்ற அவமதிப்பு வழக்கை எதிர்கொண்டு தற்போது நீதிமன்றம் அவர்கள் தரப்பு நியாயத்தை உணர்ந்து செயலாற்றி வருவதும் கூட நீதிமன்றங்கள் பெரும்பான்மை என்ன நினைக்கிறது என்பதை உணரமுடியாத நிலைக்கு சென்றுவிட்டதை காட்டுவதோடு, தற்போது மக்கள் மனதில் "இனி நீதிமன்றங்களை நம்பி பலனில்லை" என்ற விதை ஊன்றப்பட்டு விட்டதோ? என்ற ஐயப்பாட்டை எழுப்புவதாகவும் உள்ளது.

இதுபோன்ற புறக்காரணிகள் உள்ள சூழ்நிலையில் நீதிமன்றத்தையும் அதன் உத்தரவுகளையும் விமர்சிப்பதை இரும்புக்கரம் கொண்டு அடக்கப் பார்ப்பதை விட்டுவிட்டு நீதிமன்றங்கள் மக்களின் நம்பிக்கையை பெறக்கூடிய வகையில் செயல்படுவது இந்நாட்டுக்கு நல்லது பயக்கும். நீதிமன்ற உத்தரவுகளில் உள்ள முரண்பாடுகளைத் தவிர்த்து தனிப்பட்ட முறையில் நீதிபதிகளையோ, நீதிமன்றத்தையோ தரம் தாழ்த்தி விமர்சிப்போர் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

அதே சமயம் நீதிமன்றங்களும், நீதிபதிகளும் சீசரின் மனைவியைப் போல சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும் அல்லது சீதையின் கணவன் அவளை சிதையில் இறக்கி பரிசுத்தமானவள் என்று நிரூபித்ததைப் போல தங்கள் உத்தரவுகளை விமர்சன சிதையில் இறக்கிவிட்டு பரிசுத்தத்தைத் தேட வேண்டும். அதை விட்டுவிட்டு விமர்சிப்பவர்களை உள்ளே தள்ளி தன் கம்பீரத்தை இழந்துவிடக் கூடாது.

மு.அ.

# ஜாக்டோ - ஜியோ (JACTTO-GEO)

**(Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

## ஒருங்கிணைப்பாளர்கள்

**மு.சுப்பிரமணியன்**
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
**94874 01569**

**அ.மாயவன்**
தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலை பட்டதாரி ஆசிரியர் கழகம்
**94441 23684**

**க.மீனாட்சிசுந்தரம்**
தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம்
**94431 41163**

**இரா.தாஸ்**
தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி
**99943 47135**

**கு.வெங்கடேசன்**
தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கம்
**94445 83809**

**மு.அன்பரசு**
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
**98401 87508**

**செய்தித் தொடர்பாளர்**
**கு.தியாகராஜன்**
தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம்
**98841 53429**

**நிதிக் காப்பாளர்**
**ச.மோசஸ்**
தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி
**94426 85230**

**ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சங்கங்கள்**
**ஆசிரியர் சங்கங்கள்**

| வ.எ. | சங்கத்தின் பெயர் | பொறுப்பாளர்கள் | பொறுப்பு | கைபேசி எண் |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கழகம் | **ஏ.சீனிவாசன்** | மாநிலத் தலைவர் | 94440 38708 |
| 2. | தமிழ்நாடு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம் | **கே.பி.ஓ.சுரேஷ்** | மாநிலத் தலைவர் | 96777 35620 |
| | | **சி.வள்ளிவேலு** | பொதுச் செயலாளர் | 94422 24346 |
| 3. | தமிழ்நாடு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம் | **எஸ்.பக்தவச்சலம்** | மாநிலத் தலைவர் | 94443 34964 |
| | | **டி.கோவிந்தன்** | பொதுச் செயலாளர் | 99523 59351 |
| | | **அ.மாயவன்** | நிறுவனத் தலைவர் | 94441 23684 |
| 4. | தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம் | **இல.தியோடர் ராபின்சன்** | மாநிலத் தலைவர் | 94433 65104 |
| | | **க.மீனாட்சிசுந்தரம்** | பொதுச் செயலாளர் | 94431 41163 |
| 5. | தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி | **கு.சி.மணி** | மாநிலத் தலைவர் | 99656 44666 |
| | | **க.செல்வராஜு** | பொதுச் செயலாளர் | 94868 42798 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி | **ச.மோசஸ்** | மாநிலத் தலைவர் | 94426 85230 |
| | | **சி.பாலசந்தர்** | பொதுச் செயலாளர் | 94420 79402 |
| 7. | தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி | **இரா.தாஸ்** | பொதுச் செயலாளர் | 99943 47135 |
| | | **அ. நடராசன்** | மாநிலத் தலைவர் | |
| 8. | தமிழ்நாடு இடைநிலை ஆசிரியர் சங்கம் | **அ.சங்கர்** | பொதுச் செயலாளர் | |
| | | **கு.தியாகராஜன்** | மாநில பொருளாளர் | 99760 06262 |
| 9. | தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் | **கே.தியாகராஜன்** | தலைவர் | 98841 53429 |
| | | **இ.ரமேஷ்** | பொதுச் செயலாளர் | 98415 36313 |
| 10. | தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பு | **பி.பேட்ரிக் ரெய்மாண்ட்** | பொதுச் செயலாளர் | 90427 48530 |
| | | **R. ஆனந்தகணேஷ்** | மாநிலத் தலைவர் | 9976274298 |
| 11. | Tamil Nadu Government College Teachers' Association (TNGCTA) | **Dr.R.Dhamotharan** | General Secretary | 98403 16337 |
| 12. | Madurai Kamaraj Manomaniam Sundaranar Mother Therasa University Teachers Association (MUTA) | **S.Subburaju** | State President | 94439 70510 |
| | | Dr. M. Nagarajan | General Secretary | 94431 14403 |
| 13. | அரசுக் கல்லூரி ஆசிரியர் மன்றம் (தமிழ்நாடு) | முனைவர் **சி.செல்வராஜ்** | தலைவர் | 94444 85716 |
| | | பேரா.**மா.சேகர்** | பொதுச் செயலாளர் | 97902 23297 |
| 14. | இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர்கள் இயக்கம் (SSTA) | **ஜெ.ராபர்ட்** | பொதுச் செயலாளர் | 98413 56296 |
| | | **செ.ரெக்ஸ் ஆனந்தகுமார்** | தலைவர் | 99424 30990 |
| 15. | தமிழ்நாடு அனைத்து ஆசிரியர் சங்கம் (TATA) | **ஏ.சபரிராஜ்** | மாநில துணைத் தலைவர் | 95976 27704 |
| 16. | தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர்அலுவலர் சங்கம் (PSTA) | **டி.கனகராஜ்** | மாநில பொதுச் செயலாளர் | 94869 34170 |
| 17. | அனைத்து வளமைய ஆசிரியர்கள் முன்னேற்ற சங்கம் | **கே. சம்பத்** | மாநிலத் தலைவர் | 98841 47647 |
| | | **சி.முருகன்** | மாநில பொதுச் செயலாளர் | |
| 18. | அனைத்து வள மைய பட்டதாரி ஆசிரியர்கள் முன்னேற்ற சங்கம் (ARGTA) | **எம்.ராஜ்குமார்** | மாநிலத் தலைவர் | 94441 64862 |
| 19. | தமிழ்நாடு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி கணினி ஆசிரியர்கள் சங்கம் | **சி.சௌந்தர்ராஜன்** | மாநில பொதுச் செயலாளர் | 98424 36580 |
| | | **ஜி.கோபி** | மாநிலத் தலைவர் | 70920 29001 |
| 20. | Tamilnadu Higher Secondary School Vocational Teachers Kazhagam | **S.N.Janardhanan** | State General Secretary | 94433 45667 |
| 21. | பதவி உயர்வு பெற்ற பட்டதாரி மற்றும் தமிழாசிரியர் கழகம் | **உதயசூரியன்** | மாநிலத் தலைவர் | 94432 48579 |
| | | **எஸ்.முருகேசன்** | மாநில பொதுச் செயலாளர் | 97863 08598 |
| 22. | JSR தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி | **சி.ஜெகந்நாதன்** | பொதுச் செயலாளர் | 97890 92395 |
| | | **டே.குன்வர்** | மாநிலத் தலைவர் | 70108 65084 |
| | | **சோசுவாவளவன்** | | |
| 23. | ஆதிதிராவிடர் நலத்துறை அனைத்து நிலை ஆசிரியர் சங்கம் (ADWALTA) | **ஜெ.மோகனரங்கன்** | மாநிலப் பொதுச் செயலாளர் | 99412 74745 |
| 24. | வேளாண்மை பட்டதாரிகள் ஆசிரியர்கள் சங்கம் | **அக்ரி இ.இராமன்** | மாநில பொருளாளர் | 99440 30554 |
| 25. | டாக்டர் ராதாகிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் சங்கம் | **ரா.காத்தவராயன்** | மாநிலத் தலைவர் | 97874 78867 |
| 26. | அனைத்து ஆசிரியர்கள் கூட்டமைப்பு | **ப.பெருஞ்சித்திரனார்** | மாநிலப் பொருளாளர் | 94434 43306 |
| 27. | பார்வையற்றோர் ஆசிரியர் சங்கம் | **ஏ.வெங்கடேசன்** | மாநில பொதுச் செயலாளர் | 94863 60194 |
| 28. | தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி, சென்னை கிளை | **கே.சத்தியநாதன்** | மாவட்டச் செயலாளர் | 74010 42321 |
| 29. | தமிழகத் தமிழாசிரியர் கழகம் | **முனைவர் ஜெ.கங்காதரன்** | மாநிலத் துணைத் தலைவர் | 94444 80543 |

| | | | | |
|---|---|---|---|---|
| 30. | தமிழ்நாடு உடற்கல்வி ஆசிரியர் மற்றும் உடற்கல்வி இயக்குநர் சங்கம் | **D. ரவிசந்தார்** | மாநிலத் தலைவர் | 9442654977 |
| | | **T.தேவிசெல்வம்** | பொதுச் செயலாளர் | 94440 57508 |
| 31. | தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி கணினி ஆசிரியர்கள் சங்கம் | **டி.செல்வக்குமார்** | மாநிலத் தலைவர் | 88834 10910 |
| | | **ஏ.லட்சுமி நரசிம்மன்** | பொதுச் செயலாளர் | 98941 62683 |
| | | **பி.வீரமணி** | மாநில துணைச் செயலாளர் | 99769 87387 |
| 32 | தமிழ்நாடு பல்கலைக்கழக,கல்லூரி SC, ST ஆசிரியர் மற்றும் பணியாளர் சங்கம் | **Dr.மு. கண்ணையன்** | பொதுசெயலாளர் | 9600792241 |
| | | **Dr.A. முனியன்** | மாநிலத் தலைவர் | |
| 33 | பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் | **பேரா. J. காந்திராஜ்** | மாநிலத் தலைவர் | 90804 38488 |
| | | **பேரா. N. சேட்டு** | பொதுச்செயலாளர் | 94443 50860 |
| 34 | தமிழ்நாடு ஆசிரியர் காப்பாளர் சங்கம் | **கோ. இரவிசங்கர்** | நிறுவனர் (ம) மாநிலத் தலைவர் | 94434 32684 |
| 35 | தமிழ்நாடு தனியார் கல்லூரி அலுவலர் சங்கம் | **M. கனகராஜ்** | மாநில பொதுச் செயலாளர் | 94420 53676 |
| 36 | ஆசிரியர் முன்னேற்ற சங்கம் | **ம. விவேகானந்தன்** | மாநில பொதுச்செயலாளர் | 9843935900 |
| 37 | பட்டதாரி உடற்கல்வி ஆசிரியர் கழகம் | **இரா. ஜெயதேவன்** | மாநிலத் தலைவர் | 9047940473 |
| | | **பன்னீர்செல்வம்** | தலைமை நிலையச் செயல்ளர் | 9444227438 |

**அரசு ஊழியர் சங்கங்கள்**

| வ.எ. | **சங்கத்தின் பெயர்** | **பொறுப்பாளர்கள்** | **பொறுப்பு** | **கைபேசி எண்** |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் | **மு.சுப்பிரமணியன்** | மாநிலத் தலைவர் | 94874 01569 |
| | | **மு.அன்பரசு** | பொதுச் செயலாளர் | 98401 87508 |
| 2. | தமிழ்நாடு தலைமைச் செயலக ஊழியர் சங்கம் | **வெங்கடேசன்** | பொதுச் செயலாளர் | 94445 83809 |
| 3. | தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கம் | **கே. குமரேசன்** | மாநிலத் தலைவர் | 9443184984 |
| | | **எஸ். பார்த்திபன்** | பொதுச்செயலாளர் | 9443019280 |
| **4.** | தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் | **பி. கிருஷ்ணசாமி** | மாநில பொதுச்செயலாளர் | 9994246764 |
| 5. | த. நா. கருவூல கணக்குத்துறை அலுவலர் சங்கம் | **ஆ. பாலகிருஷ்ணன்** | மாநிலத் தலைவர் | 9486347386 |
| | | **எம். முகமதுஅலிஜின்னா** | பொதுச்செயலாளர் | 8124786778 |
| 6. | பொது சுகாதாரத்துறை அலுவலர் சங்கம் | **க. கங்காதரன்** | மாநிலத் தலைவர் | 9443213970 |
| | | **ஜெ. லெட்சுமிநாராயணன்** | பொதுச்செயலாளர் | 9443570008 |
| 7. | தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் | **கி ஆண்டாள்** | மாநிலத் தலைவர் | 9442044389 |
| | | **எஸ். முருகேசன்** | பொதுச் செயலாளர் | 9894413721 |
| 8. | தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் பராமரிப்பு நிறுவன தொழிலாளர் சங்கம் | **எம். வெங்கடேசன்** | மாநிலத் தலைவர் | 9444912688 |
| | | **ஆர். பாலசுப்ரமணியன்** | பொதுச்செயலாளர் | 9943556336 |
| 9. | தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர் சங்கம் | **பி.எஸ். அப்பர்** | மாநிலத் தலைவர் | 9941214121 |
| | | **அ. சேகர்** | பொதுச்செயலாளர் | |
| 10. | த.நா.நெடுஞ்சாலைத்துறை ஊழியர் சங்கம் | **க. முத்துக்குமார்** | மாநிலத் தலைவர் | 99766 54151 |
| | | **ஆ. ரங்கசாமி** | பொதுச்செயலாளர் | 9444938656 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | த.நா. கிராம சுகாதார செவிலியர் சங்கம் | **சி. பரமேஸ்வரி** | மாநிலத் தலைவர் | 9445138263 |
| | | **ஆர். பாண்டியம்மாள்** | பொதுச் செயலாளர் | 9445133003 |
| 12. | த.நா. மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்கம் | **ஏ.ஜீவானந்தம்** | மாநிலத் தலைவர் | 9442016022 |
| | | **கே.எம். தியாகராஜன்** | பொதுச் செயலாளர் | 93666 77177 |
| **13.** | த.நா. புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்கம் | **அ.இலட்சுமணசிங்** | மாநிலத் தலைவர் | 99413 08569 |
| | | **பி. அந்துவன்சேரல்** | பொதுச் செயலாளர் | 9443874047 |
| **14.** | த.நா. தொழில்பயிற்சி அலுவலர் சங்கம் | **சி. ராமலிங்கம்** | மாநிலத் தலைவர் | 9445660057 |
| | | **என். ரமேஷ்** | பொதுச் செயலாளர் | 9444475940 |
| 15. | த.நா. கூட்டுறவுத் தணிக்கைத்துறை ஊழியர் சங்கம் | **திரு.எஸ். ஆறுமுகம்** | மாநிலத் தலைவர் | 9942296694 |
| | | **ஆர்.எம். கன்னியப்பன்** | பொதுச்செயலாளர் | 9994585520 |
| **16.** | த.நா. வேலைவாய்ப்புத்துறை ஊழியர் சங்கம் | **எம். இரவிச்சந்திரன்** | மாநிலத் தலைவர் | 9884059061 |
| | | **ஆ. தனசேகரன்** | பொதுச் செயலாளர் | 9443325685 |
| **17.** | தமிழ்நாடு அரசு சுகாதார போக்குவரத்துத்துறை ஊழியர் சங்கம் | **எஸ். நடராஜன்** | மாநிலத் தலைவர் | 9489865556 |
| | | **கே. நாகராஜன்** | பொதுச்செயலாளர் | 9442123631 |
| 18. | த.நா. அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கம் | **எம். சௌந்தரராஜன்** | மாநிலத் தலைவர் | 9942522466 |
| | | **திரு. ஏ. ரத்தினம்** | பொதுச் செயலாளர் | 9949992447 |
| **19.** | தமிழ்நாடு தொழிலாளர் மற்றும் தொழிற்சாலை ஆய்வகத்துறை ஊழியர் சங்கம் | **பிரான்சிஸ்சேவியர்** | மாநிலத் தலைவர் | 94442 97306 |
| | | **ஆர். இராமதாஸ்** | பொதுச் செயலாளர் | 94442 36445 |
| **20.** | தமிழ்நாடு மருத்துவ ஆய்வக நுட்பனர் சங்கம் | **ம. செல்வகுமார்** | மாநிலத் தலைவர் | 9894127999 |
| | | **வீ. பார்த்தசாரதி** | பொதுச் செயலாளர் | 9487721402 |
| **21.** | த.நா .பட்டு வளர்ச்சித் துறை ஊழியர் சங்கம் | **எம். சிவப்பிரகாசம்** | மாநிலத் தலைவர் | 9443794433 |
| | | **சி.பி. ஜெயராமன்** | பொதுச் செயலாளர் | 9442282580 |
| **22.** | த.நா. நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர் சங்கம் | **ஏ. அம்சராஜ்** | மாநிலத் தலைவர் | 9442650450 |
| | | **மா.பாலசுப்பிரமணியன்** | பொதுச் செயலாளர் | 9443371608 |
| **23.** | இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர் சங்கம் | **ப.பாரதி** | மாநிலத் தலைவர் | 98654 96794 |
| | | **வி.ராஜாராமன்** | மாநில பொதுச்செயலாளர் | 99943 96461 |
| 24. | தமிழ்நாடு சமூக நலத்துறை பணியாளர் சங்கம் | **ஜி. துரைசிங்** | பொதுச் செயலாளர் | 9486285952 |
| 25. | தமிழ்நாடு வேளாண்மை பொறியாளர்கள் சங்கம் | **சிவசண்முகம்** | மாநிலத் தலைவர் | |
| | | **எஸ். ராஜசேகரன்** | மாநில பொதுச்செயலாளர் | 9444811304 |
| 26. | த.நா. அரசு அருங்காட்சியக ஊழியர் சங்கம் | **எஸ். பார்த்திபன்** | மாநிலத் தலைவர் | 9600120313 |
| | | **ச. பிரவீன்** | பொதுச்செயலாளர் | |
| 27. | தமிழ்நாடு நகராட்சி , மாநகராட்சி அலுவலர் சங்கம் | **எஸ்.ஏ. சைய்யது உசேன்** | மாநிலத் தலைவர் | 94875 48256 |
| | | **மு. தாமோதரன்** | பொதுச்செயலாளர் | 9443521073 |
| 28. | தமிழ்நாடு நிலஅளவை அலுவலர்கள் ஒன்றிப்பு | **திரு. ஆர். காயம்பு** | மாநிலத் தலைவர் | 9443413213 |
| | | **திரு.ஜெ. ராஜா** | பொதுச்செயலாளர் | 9444865203 |
| 29. | வருவாய் நிர்வாகம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைதுறை, தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை அலுவலர் சங்கம் | **திரு. அசோக்குமார்** | தலைவர் | 984056051 |
| | | **திரு. சுபிச்சுந்தர்** | செயலாளர் | 8122991181 |

| | | | | |
|---|---|---|---|---|
| 30. | நகர்புற நிலவரி மற்றும் நில உச்சவரம்புத் துறை ஊழியர் சங்கம் | **திரு. பாலாஜி** | தலைவர் | 9840487780 |
| 31. | பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத் துறை நிர்வாக ஊழியர் சங்கம் | **முத்தமிழ்செல்வன்** | மாநிலத் தலைவர் | 9894786487 |
| | | **பிக்கையா** | பொதுச் செயலாளர் | 9841051971 |
| 32. | த.நா. மறுவாழ்வுத்துறை ஊழியர் சங்கம் | **புகழேந்தி** | தலைவர் | 9444574634 |
| | | **ரமேஷ்** | பொதுச் செயலாளர் | |
| 33. | தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சுப் பணியாளர் சங்கம் | **திரு. இரா. பன்னீர்செல்வம்** | மாநிலத் தலைவர் | 9443675776 |
| | | **கே. முத்துகுமார்** | பொதுச் செயலாளர் | 9443534476 |
| 34. | தமிழ்நாடு நகராட்சி நிர்வாக ஆணையரக அனைத்து ஊழியர் சங்கம் | **கி. இரகுராமன்** | தலைவர் | 9444443235 |
| 35. | தமிழ்நாடு கதர்கிராம தொழில் வாரிய அமைச்சுப் பணியாளர் சங்கம் | **கோ. நாகலிங்கம்** | மாநிலத் தலைவர் | 9444666587 |
| | | **இரா. சேரலாதன்** | பொதுச் செயலாளர் | 9965809683 |
| 36. | அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரி தொழில்நுட்ப அலுவலர் சங்கம் | **பி. ரவி** | மாநிலத் தலைவர் | |
| | | **பி. இளங்கோ** | பொதுச் செயலாளர் | |
| 37. | தமிழ்நாடு நெடுஞ்சாலை இயந்திர போக்குவரத்து தளவாட பொதுத் தொழிலாளர் சங்கம் | **ஜி. சுப்பிரமணியன்** | மாநிலத் தலைவர் | 9443033181 |
| 38. | தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம் | **பி. கருணாகரன்** | மாநிலத் தலைவர் | 9442509595 |
| | | **டி.செந்தில்குமார்** | மாநில பொதுச் செயலாளர் | 9043891727 |
| 39. | தமிழ்நாடு அரசு மாநகர சுகாதார செவிலியர் சங்கம் | **ஜெ, சரஸ்வதி** | மாநிலத் தலைவர் | 9444962495 |
| | | **எம். சுதா** | பொதுச் செயலாளர் | 9884897629 |
| 40 | தமிழ்நாடு வணிகவரி பணியாளர் சங்கம் | **என்.ஜனார்தனன்** | மாநிலத் தலைவர் | 9443553566 |
| | | **சு. ஜெயராஜராஜேஸ்வரன்** | பொதுச் செயலாளர் | 9698687883 |
| 41. | தமிழ்நாடு உதவி ஆணையர், வணிகவரி அலுவலர் மற்றும் துணை வணிகவரி அலுவலர்கள் சங்கம் | **இராஜேந்திரன்** | மாநிலத் தலைவர் | |
| | | **க. லட்சுமணன்** | பொதுச்செயலாளர் | 9442253356 |
| 42. | தமிழ்நாடு சிறப்புக்காவல் அடிப்படை ஊழியர் சங்கம் | **ஆர். சேகர்** | மாநிலத் தலைவர் | |
| | | **எம். அருண்ராவ்** | மாநில பொதுச்செயலாளர் | 9003208627 |
